மக்கள் அதிகாரம்

மக்களின் குரல் • மக்களின் உரிமை • சமூக நலம்

MAKKAL ADHIKARAM

SOCIAL WARE ONLINE NEWS PORTAL

சமூக நலம் | பொது நலன் | மக்கள் நலன் | இணையதள பத்திரிகை

உண்மை பேசுவோம்... மக்களுக்கு செயல்படுவோம்...

Volume 11 ; Issue 10 ; Oct - 2026 : Price Rs : 10 /-

Where there is Love ! There is Pachaiyappas !!

100th ANNIVERSARY

உ

பட்டில் பாரம்பரியம்,
பாசத்தில் பச்சையப்பாஸ்

KANCHIPURAM PACHAIYAPPAS SILKS Since 1926 ®

நூலில் நெய்யும் பாரம்பரியம்,
கைராசியில் மலரும் சிறப்பு,
கல்யாண ராசியில் நிறையும் மகிழ்ச்சி.

CHENNAI | KANCHIPURAM | VELLORE | THIRUVANNAMALAI | KOVAI | TRICHY | HOSUR

TOLL FREE NUMBER : 1800-5995055

www.pachaiyappas.in.

உளுந்தை ஊராட்சி

கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் , திருவள்ளூர் மாவட்டம்.

தமிழக அரசின் சார்பில் நடை பெற்ற மக்கள் திட்டப் பணிகள் குறித்து விவரம் .

1. 2024 -25 ஆம் ஆண்டு 15 வது மாநில நிதி குழு மானியம் பெறப் பட்ட நிதியிலிருந்து உளுந்தை ஊராட்சியில் உள்ள இருளர் காலனிக்கு பேவர் பிளாக் சாலை போடப் பட்டதில் செலவிடப்பட்ட தொகை ரூபாய் : 3,47,840 /-

2.உளுந்தை இருளர் காவனிக்கு டிஸ்டிரிபூஷன் லைன் (Distribution line) 152 metter போடப்பட்ப் பட்டதில் செலவிடப்பட்டத் தொகை ரூபாய் 2,60,880 /-

3.உளுந்தை ஊராட்சியில் மேல் நிலை நீர் தேக்க தொட்டிக்கு ஏணி பாதுகாப்பு,மூடி பாதுகாப்பு, மற்றும் சுற்றிலும் கம்பி வேலி அமைக்க செலவிடப்பட்ட தொகை ரூபாய் 2,11,000 /-

4 .2024 – 25 ஆண்டில் உளுந்தை ஊராட்சிக்கு புதிய ஏரி (Rejvenation of MI Tankes) உருவாக்கும் பணிக்கு செலவிடப்பட்ட தொகை ரூபாய் 5,76,000 /-

5.2024 - 25 உளுந்தை ஊராட்சி லோகையா நகரில் சிமெண்ட் சாலை (141 மீட்டர்) போடப் பட்டதில் செலவு செய்த தொகை ரூபாய் 8,88,000 /-

6. உளுந்தை ஊராட்சி யூமதி நகர் 2வது குறுக்குத் தெருவில் சிமெண்ட் சாலை(123 m) அமைக்கும் பணிக்கு செலவிடப் பட்டத் தொகை ரூபாய் 7,78,000 /-

7. உளுந்தை ஊராட்சி யூமதி நகர் 22 வது குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை (84 m) அமைக்கும் பணிக்கு செலவிடப் பட்டத் தொகை ரூபாய் 5,34,000 /-

8 . உளுந்தை ஊராட்சி யூமதி நகர் 1 வது குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை (121 m) அமைக்கும் பணிக்கு செலவிடப் பட்டத் தொகை ரூபாய் 7,67,000 /-

9. 2024 –25 உளுந்தை ஊராட்சிக்கு புதிய துணை சுகாதார நிலைய கட்டிடம் அமைக்க செலவிடப்பட்டத் தொகை ரூபாய் 45,00,000 /-

10. உளுந்தை ஊராட்சி உடையார் தெருவில் சிமெண்ட் சாலை (32.5 m) அமைக்கும் பணிக்கு செலவிடப் பட்டத் தொகை ரூபாய் 2,08,000 /-

11. உளுந்தை ஊராட்சியில் இருளர் காலனிக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு செலவிடப் பட்டத் தொகை ரூபாய் 4,69,000 /-

திருமதி .கவிதா இ.ஆ.ப . அவர்கள்,

மாவட்ட ஆட்சித் தலைவர் ,திருவள்ளூர் மாவட்டம் .

திருமதி.கே.இந்து பாலா அவர்கள்,

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் – திருவள்ளூர் மாவட்டம் .

திரு .ரவிசந்திரன் – மாவட்ட ஊராட்சி (தணிக்கை) மற்றும் இயக்குநர் .

திருமதி . சுலோச்சனா – வட்டார வளர்ச்சி அலுவலர் .

கடம்பத்தூர் .

உளுந்தை பஞ்சாயத்து செயலர் – கார்த்திகேயன்

PRGI No :TNTAM / 2015 /75278

தொடுகாடு ஊராட்சி

கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் , திருவள்ளூர் மாவட்டம்.

தமிழக அரசின் சார்பில் நடை பெற்ற மக்கள் திட்டப் பணிகள் குறித்து விவரம் .

1. 2024 -25 ஆம் ஆண்டு 15 வது மாநில நிதி குழு மானியம் பெறப் பட்ட நிதியிலிருந்து ITI காலனிக்கு மழை நிர்கால்வாய் அமைக்க செலவிடப்பட்ட தொகை ரூபாய் : 4,75000 / -
2. 2024 -25 ஆம் ஆண்டு ITI காலனிக்கு பேவர் பிளாக் சாலை அமைக்க செலவு செய்த தொகை ரூபாய் : 4,65,000 /-

3. 2024 -25 ஆம் ஆண்டு மேட்டு ராமானுஜபுரத்தில் பேவர் பிளாக் சாலை அமைக்க ரூபாய் : 4,75,000 /_
4. 2024 -25 ஆம் ஆண்டு பஞ்சமந்தாங்கல் மாதா கோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்க ரூபாய் : 7,00,000 /-

5. 2024 -25 ஆம் ஆண்டு மேட்டு ராமானுஜபுரத்தில் பேவர் பிளாக் சாலை அமைக்க ரூபாய் 1,35,000 /-
6. 2024 -25 ஆம் ஆண்டு மேட்டு ராமானுஜபுரத்தில் மழை நீர் கால்வாய் அமைக்க ரூபாய் 4,37,000 /-
7. 2025 - 26 ஆம் ஆண்டு ITI காலனிக்கு சிமெண்ட் சாலை அமைக்க ரூபாய் : 7,00,000 /-

8. 2025 - 26 ஆம் ஆண்டு நமச்சிவாயபுரம் கிராம கிருஷ்ணன் கோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்க ரூபாய் : 6,00,000 /-
9. 2025 - 26 ஆம் ஆண்டு நமச்சிவாயபுரம் கிராம மாத்தம்மன் கோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்க ரூபாய் : 5,00,000 /-

10. 2025 - 26 ஆம் ஆண்டு நமச்சிவாயபுரம் கிராமத்தில் புதிய ஆழ்துளை கிணறு அமைக்க ரூபாய் : 8,00,000 /-
11. 2025 - 26 ஆம் ஆண்டு ஓம் நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைக்க ரூபாய் : 5,00,000 /-
12. 2025 - 26 ஆம் ஆண்டு தொடுகாடு காலனி பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைக்க ரூபாய் : 5,00,000 /-
13. 2025 - 26 ஆம் ஆண்டு பள்ள ராமானுஜபுரத்தில் மலைவாழ் மக்கள் குடியிருப்பு பகுதியில் புதிய பைப் லைன் மற்றும் குழாய் அமைக்க ரூபாய் 6,13,000 /-

திருமதி .கவிதா இ.ஆ.ப . அவர்கள்,

மாவட்ட ஆட்சித் தலைவர் ,திருவள்ளூர் மாவட்டம் .

திருமதி.கே.இந்து பாலா அவர்கள்,

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் – திருவள்ளூர் மாவட்டம் .

திரு .ரவிசந்திரன் – மாவட்ட ஊராட்சி (தணிக்கை) மற்றும் இயக்குநர் .

திருமதி . சுலோச்சனா – வட்டார வளர்ச்சி அலுவலர் .

கடம்பத்தூர் .

தொடுகாடு பஞ்சாயத்து செயலர் – ஹரிசங்கர் .

கடந்த திமுக, அதிமுக, தமிழ்நாட்டில்! 50 ஆண்டு காலத்திற்கு மேலாக ஆட்சி செய்தது .ஆனால், பத்திரிக்கை துறையில் எந்த மாற்றமும் கொண்டு வரவில்லை. ஆனால்,பத்திரிக்கை துறை! கார்ப்பரேட்டுகளின் துறையாக மாற்றியதுதான் இவர்களின் சாதனை.

ஏனென்றால், இந்த பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் தான் ஊழலுக்கு ஒத்து ஊதி வருவார்கள். இதனால், தமிழகத்தில் ஊழல்வாதிகள் அதிகரித்தார்கள், ஊழல்கள் அதிகரித்தது ,உழைப்பவன் முன்னேற்றம் தடைப்பட்டது. ஊரை ஏமாற்றுபவன் முன்னேற்றம் அதிகரித்தது. இதுதான் பத்திரிக்கை துறையில் கார்ப்பரேட் பத்திரிகைகளின் சாதனை. இதை பத்திரிக்கை துறையில், விவரமானவர்கள் ஆய்வு செய்து பார்த்து கொள்ளட்டும். அவர்கள் ஆய்வு செய்தாலும், ஆய்வு செய்யவில்லை என்றாலும், இரண்டு கட்சிகளின் ஊழல் வரலாறுகள், மக்களிடம் தற்போது பேசப்பட்டு வருவது தான் சாட்சி! மேலும், தற்போது ,தமிழக வெற்றி கழக ஆட்சி மாறி இருந்தாலும் ,இன்றும் இதே கார்ப்பரேட்டுகள், இந்த தமிழக வெற்றி கழகத்திற்கு ஜால்ராவாக இருந்து சலுகை, விளம்பரங்கள் வாங்கி, மீண்டும் தங்களை வலுப்படுத்திக் கொள்ளலாம்

என்று அவர்களுடைய நிருபர்கள், கோட்டை வட்டாரங்களை சுற்றி வருகிறார்கள். மேலும்,அங்குள்ள நிருபர்கள் செய்தியை கொடுக்கிறார்களோ,இல்லையோ ,அதிகாரிகளுக்கு அட்டனன்ஸ் கொடுத்து, தினமும் அவர்களுக்கு ஒருவரைப் பற்றி, ஒருவர் புறம் சொல்லிக் கொண்டு, அவர்களுக்கு என்ன வேலை இருக்கிறது? பத்திரிகைகளை பற்றி புறம் சொல்லிக் கொண்டு,

அரசியல் மாற்றம் தேவை என்று மக்கள் தமிழக வெற்றி கழகத்திற்கு வாக்களித்திருக்கிறார்கள். அதே மாற்றம் பத்திரிக்கை துறையில் தேவை!

- சமூக நலன் பத்திரிகைகள்.

அந்த பத்திரிகைகளுக்கு புரோக்கர் வேலை பார்த்துக் கொண்டிருப்பார்கள். மேலும்,நாங்கள் எல்லாம் நிருபராக கார்ப்பரேட் பத்திரிக்கையில் பணியாற்றியபோது, இங்கே தலைமை நிருபர் என்ற போர்வையில் அதிகாரிகளுக்கு, 5 ஸ்டார் ஹோட்டலில் ரூம் போட்டு கொடுப்பார்கள் .நடிகைகளை கொண்டு வந்து கொடுப்பார்கள். அந்த கார்ப்பரேட் கம்பெனி முதலாளி பண முடிப்பு கொடுப்பார். இப்படி எல்லாம் கார்ப்பரேட் பத்திரிகைகளின் குறுக்கு வழி முன்னேற்றம்.

இதை ஏன் சொல்கிறேன்? என்றால்! இப்போதுதான் இந்த செய்தி துறை! நேர்மையான அதிகாரிகளால், மாற்றத்தை கொண்டு வர முயற்சி செய்கிறார்கள் என்பது மட்டும் தெளிவாக புரிகிறது. அப்போதும் அரசியல் உள்ளே வைந்து ,இந்த பத்திரிகைகளுக்கு சலுகை, விளம்பரங்கள் கொடுக்கக் கூடாது. இணையதளங்களுக்கு கொடுக்கக் கூடாது .அதை சோசியல் மீடியா என்று கதை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும்,இந்த கதை எல்லாம் யார் விடுவார்கள்? என்றால் திமுக ,அதிமுக, கட்சிக்காரன் தான் விடுவான் .ஆனால், பத்திரிக்கை துறையில் இருக்கக்கூடிய சில அதிகாரிகள் ,அவர்களுக்கு உடந்தையாக இருப்பதால் ,சோசியல் மீடியாவுக்கும், இணையதள பத்திரிகைக்கும் ,அர்த்தம் தெரியாதவர்கள் என்றுதான் அவர்களை சொல்ல வேண்டும். மேலும்,தற்போது தமிழக வெற்றிக் கழகத்தின் ஆட்சியில் பத்திரிக்கை துறையில் மாற்றம் தேவை! என்பதுதான் சமூக நலன் பத்திரிக்கைகளின் முக்கிய கோரிக்கையாக உள்ளது.

தவிர,இதில் செய்தியின் முக்கியத்துவம் மிகவும் முக்கியமானது. செய்திக்கு முக்கியத்துவம் இல்லாமல், சர்குலேஷனுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பத்திரிக்கை துறையை இந்த கார்ப்பரேட் பத்திரிகைகள் ஏமாற்றி வந்தது .அது கடந்த திமுக, அதிமுக, ஆட்சியில் இதை தான் செய்து பல கோடி ரூபாய்க்கு விளம்பரங்களையும் ,சலுகைகளையும் அனுபவித்தார்கள்.

மேலும்,எப்படி இப்போது திமுகவும், அதிமுகவும் தாராபுரம் ,மதுராந்தகம் தொகுதியில் உள்ள அரசியல் கட்சியினர் புலம்புகிறார்களோ ,அதே போல் தான், இவர்களும் புலம்பி கொண்டு இருக்கிறார்கள். இங்கே இந்த பத்திரிக்கைகளுக்கு எல்லாம் சலுகை, விளம்பரங்கள் கொடுத்து விடப் போகிறார்கள்? கொடுத்து விட்டால்! இவர்களும்

நமக்கு போட்டி தானே என்று நினைக்கிறார்கள். அறிவு சார்ந்த ஒரு துறையில்! பணத்தை வைத்து போட்டி ,போட்டுக் கொண்டிருக்கும்

கார்ப்பரேட் பத்திரிகைகள் ,தொலைக்காட்சிகள் தற்போது கலக்கத்தில் தான் இருக்கிறார்கள். மேலும்,தற்போது வந்திருக்கும் இயக்குனர் அருண் தம்புராஜ் இதற்கு இடம் கொடுக்கவில்லை என்று தான் தற்போது வெளிவரும் தகவல். அவர் அடித்தட்டு பத்திரிகைகளை மேலே கொண்டு வர வேண்டும் என்று சொல்வதாக தகவல். அதுமட்டுமல்ல, சீஃப் செகரட்டரி (additional chief secretary Vijay Kumar IAS) விஜயகுமார் ஐஏஎஸ்

மற்றும் தமிழக முதல்வரின் பி ஏ க்களில் ஒருவரான அண்ணாதுரை ஐஏஎஸ், இந்த மாற்றத்திற்கு முக்கியமானவர்களாக இருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால்! இவர்களுக்கு ஒரு செய்தியை சொன்னவுடன் ,அதை படித்துப் பார்த்து, உடனே வி'யத்தை புரிந்து கொள்கிறார்கள். கடந்த காலங்களிலும், புரிந்தவர்கள் உண்டு. ஆனால் ,அங்கே அரசியல் வலுவாக இருந்தது .அதனால் ,அவர்கள் சொன்னாலும் அது எடுபடவில்லை.

மேலும் ,நான் பாஸ்கர பாண்டியன் ஐஏஎஸ் காலத்தில் இருந்து ,வந்த அத்தனை

இயக்குனர்களை சந்தித்து, இது விஷயமாக பேசி இருக்கிறேன். எல்லோரும் ஒத்துக் கொண்டார்கள். நீங்கள் சொல்வது நியாயம் .ஆனால், அரசியல் அதை ஏற்கவில்லை. மேலும்,கடைசியாக இருந்த வைத்தியநாதன் ஐஏஎஸ் ,உங்களுக்காக மூன்று முறை நான் பேசி இருக்கிறேன் என்று தெரிவித்தார்.

அப்படி என்றால், செய்தித் துறையில் ஒரு நியாயத்தை பின்பற்றி ,இந்த சலுகை ,விளம்பரங்கள் கொடுக்கவில்லை என்பது ஊர்ஜிதம் ஆகிறது. மேலும், அரசு விளம்பரம் கொடுப்பதில் எதற்கு ஏஜென்சி தேவை? அரசு விளம்பரத்தை நேரடியாக கொடுக்க முடியாதா? எதற்காக ஏஜெண்டுகள் இடம் கொடுக்க வேண்டும்? இந்த ஏஜெண்டுகளால் தான் செய்தித் துறையில் மிகப்பெரிய ஊழல்கள் நடக்கிறது. மேலும்,செய்து துறையில் ஊழலை ஒழிக்க வேண்டும் என்றால், முதலில் ஏஜென்ட்களை ஒழிக்க வேண்டும். ஏஜென்ட்களை ஒழிக்காமல், செய்து துறையின் ஊழலை ஒழிக்க முடியாது.

அதனால், இந்த உண்மையை செய்தித் துறையின் இயக்குனர் அருண் தம்பராஜ், மற்றும் அண்ணாதுரை ஐஏஎஸ் தமிழக முதல்வர் விஜயின் கவனத்திற்கு கொண்டு சென்று, இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பது சமூக நலன் பத்திரிகைகளின் முக்கிய கோரிக்கை.

எனவே, காலத்திற்கு ஏற்றவாறு ,செய்தி துறையில் மாற்றத்தை கொண்டு வர வேண்டும் .அதற்கு இணையதள பத்திரிக்கைகளுக்கு கொடுக்க வேண்டிய சலுகை, விளம்பரங்கள், அக்ரிடேஷன் கார்டு, மற்றும் பஸ் பாஸ் உள்ளிட்ட அனைத்து சலுகைகளும், பத்திரிகையின் தகுதிக்கு தக்கவாறு, கொடுக்க வேண்டும் என்பது தமிழக வெற்றி கழகத்தின் அரசுக்கு ,மக்கள் அதிகாரம் பத்திரிக்கை சார்பிலும், சமூக நலன் பத்திரிகைகள் சார்பிலும், முக்கிய கோரிக்கை.

.

அரசியல் விழிப்புணர்வு இல்லாத வரை மக்களுக்கு அரசியல்! ஏமாற்றமே! —சமூக நலன் பத்திரிகைகள்

அதிமுக வந்தது அதுவும் அதே வழியில் சென்றது. சாமானிய மக்கள் அடித்தட்டு மக்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்ற எந்த நோக்கத்திற்காக அரசியல் இருந்ததோ அது சாமானிய மக்களுக்காக அடிதட்டு மக்களுக்காக இல்லாமல் இவர்கள் சொந்த சுயநலத்திற்காக அரசியல் ஆக்கிவிட்டார்கள். அங்கே அரசியல் நோக்கமே அடிபட்டு போய்விட்டது. மேலும், இதை எந்த பத்திரிக்கை

,தொலைக்காட்சிகளும் இந்த உண்மையை வெளிப்படுத்தாது. இதற்கு பல உதாரணங்களை சொல்ல முடியும் .காமராஜர் காலத்தில் ஆட்சி எப்படி இருந்தது? ராஜாஜி காலத்தில் தமிழ்நாட்டில் ஆட்சி எப்படி இருந்தது? அவர்கள் காலத்தில் வாழ்ந்த மக்கள் எப்படி வாழ்ந்தார்கள்? இவர்கள் யாருமே விளம்பர அரசியலை விரும்பாதவர்கள்.

தமிழ்நாட்டின் கடந்த கால அரசியல் வரலாறு இரண்டு வகையாக பிரிக்கலாம். அது 1965 க்கு முன், இருந்த அரசியல் எப்படி இருந்தது? அப்போது இவ்வளவு பத்திரிகைகள் இல்லை .தொலைக்காட்சிகள் இல்லை. மக்களிடம் படிப்பறிவு இல்லை. ஆனால், தூய்மையான நேர்மையான அரசியல் இருந்தது. ஊழல் என்றாலே என்ன என்று அரசியலில் மக்களுக்கும் தெரியாது .

மேலும்,எப்போது கார்ப்பரேட் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகள் செய்தியை சொல்லாமல் விளம்பர அரசியலை முன்னெடுத்ததோ அப்போதே நாட்டில் ஊழல் ஆரம்பித்துவிட்டது. மக்களுக்கு உண்மையை சொல்ல வேண்டிய பத்திரிகை தொலைக்காட்சிகள் அவர்களுடைய பொய்களை எல்லாம் செய்தி என்று விளம்பரம் செய்தது இங்குதான் அரசியலுக்குள் பத்திரிக்கை

அரசியலுக்கு வந்தவர்களுக்கும் தெரியாது. அப்படிப்பட்ட அரசியல் எப்படி பொதுநலமானது?அப்படி பட்ட அரசியல் எப்படி சுயநலமானது?கருணாநிதி எப்போது தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்தாரோ, திமுக எப்போது வந்ததோ அப்போதே தமிழ்நாட்டில் அரசியலுக்குள் இருள் சூழ்ந்து விட்டது. இவர்கள் சொல்வார்கள் . நாங்கள் வந்து தான் அடித்தட்டு மக்களை உயர்த்தினோம். நீங்கள் உயர்த்தவில்லை ,உங்களை உயர்த்திக் கொண்டீர்கள். இதுதான் உண்மை. இதிலிருந்து

வந்து விட்டது. பத்திரிகைகள் அரசியலுக்கு வெளியே இருக்க வேண்டும். எப்படி இது நான்காவது தூணாகும்? ஊழல்வாதிகளின் பேட்டியும் போடுவார்கள். அவர்கள் பேசுவதை அப்படியே போட்டுவிட்டு, தாங்கள் தான் பெரிய பத்திரிகை என்று இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், என்று காட்டிக் கொண்டிருப்பார்கள். பல லட்சம் கோடி ஊழல் அரசியல்வாதியான பா. சிதம்பரம் சொல்வதை அப்படியே போடுவார்கள். எனவே, இந்த உண்மையை படிக்காத வரை, வாக்காளர்கள்

ஆகிய பொதுமக்கள் அனைவருக்கும் ,அரசியல் ஏமாற்றம்தான். அரசியல் கட்சி வேறு ,அரசியல் வேறு, இரண்டுக்கும் அர்த்தம் தெரியாமல் கூட பல பேர் சிறிய பத்திரிகை நடத்துகிறார்கள். கார்ப்பரேட் மீடியாவும் ,அப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறது. மேலும் ,மக்களுக்காக தான் அரசியல்! மக்களுக்காக தான் ஆட்சி !அப்படி இருக்கும்போது, ஏன் 1965 வரை, அப்படி இருந்த அரசியல்! அதன்பிறகு அரசியல் கட்சியினருக்காக எப்படி அது மாறியது?

படிப்பறிவு இல்லாத மக்கள் வாழ்ந்த காலத்திலே அரசியலில் நேர்மை, உண்மை, உழைப்பு, மக்களுக்காக இருந்தது. ஆனால் ,படித்து பட்டம் பெற்று ,கம்ப்யூட்டர், செல்போன் இணையதளம், எல்லாம் வந்த இப்போதுதான் ஊழல் ,மோசடி ,ஏமாற்றுதல் ,இது அதிகமாக மக்களிடம் ,வாழ்க்கையில் ,அரசியலில் சந்திக்க வேண்டி இருக்கிறது. அது ஏன்? அதுதான் விழிப்புணர்வு இல்லை. எல்லோரும் பணத்தைப் பற்றி தான் சிந்திக்கிறார்கள். பணம்தான் வாழ்க்கையின் முக்கியமாக இருக்கிறது.

ஆனால், தகுதி என்பதை மறந்து விட்டார்கள். உழைப்பை மறந்து விட்டார்கள். உண்மை ,நேர்மை, விசுவாசம், மறந்துவிட்டார்கள். இது அடிப்படை! இந்த அடிப்படை தகுதி இல்லாத

ஒருவர் ,அரசியல் கட்சிக்கு வந்து, அந்த கட்சியின் மூலம் பதவி பெற்று, பல லட்சம் கோடிக்கு ஊழல் செய்கிறார். அவருக்கு கீழே எத்தனை கட்சிக்காரர் இருக்கிறார்களோ, அவரவர் தகுதிக்கு தக்கவாறு ,அவர்கள் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டார்கள். அரசியல் என்பது தன்னுடைய உழைப்பை மக்களுக்கு தியாகம் செய்ய வருகின்ற வேலை. இது அப்படியே திமுக கட்சி! அரசியல் என்பது கொள்ளை அடிப்பதாக மாற்றிவிட்டது. அதிமுக பாதி கொள்ளை என்றால் ,திமுக முழு கொள்ளை .ஏனென்றால் இவர்கள் இருவரும் தானே மாறி, மாறி 60 ஆண்டு காலம் ஆட்சி செய்து விட்டார்கள் .அதற்கு இவர்களுடைய சொத்து கணக்கு தான் ஆதாரம்.

மேலும் ,1965 க்கு முன் அரசியலுக்கு வந்தவர்களின் சொத்து கணக்கு எடுத்துப் பாருங்கள். அவர்களெல்லாம் அரசியலுக்கு வந்து, தங்களுடைய சொத்து இழந்து இருப்பார்கள். 1965 க்கு பிறகு இவர்களுடைய சொத்து கணக்கை பாருங்கள், சம்ந்தா, சம்பந்தமே இருக்காது .சோத்துக்கு வழி இல்லாதவர்கள் கூட, கோடீஸ்வரர்கள். பிஎம்டபிள்யூ காரில் செல்வார்கள். இவர்களுக்கு எந்த தொழிலும் தெரியாது .தொழிலை பற்றிய படிப்பும் கிடையாது .அரசியல்! என்பது தொழில் செய்யும் இடம் இல்லை. ஆனால், இவர்களுக்கு எப்படி இந்த சொத்து வந்தது? யார் கொடுத்தது? கட்சி நடத்துவதற்கு எப்படி பணம் வந்தது? உண்டியல் குளுக்குவார்கள் .மக்கள் கொடுத்தார்கள் .இந்த கதை எல்லாம் விடுவார்கள்.

கதை விடுவதில் கை தேர்ந்த ஒரு கூட்டம் திமுக, அரிச்சந்திரனை விட நாங்கள் தான் உண்மையான சத்தியவான்கள் என்று பேசுவார்கள். பிராடுகள் அதிகம் பேசிக் கொண்டிருக்கும் அரசியலில், ஆனால், அவர்கள் பேசுவதற்கும் செயல்படுவதற்கும் சம்பந்தமே இருக்காது. இந்த பிராடுகள் பேசுகின்ற பேச்சுகள், எல்லாம் மக்கள் எப்போது பத்திரிக்கை, தொலைக்காட்சிகளில்

உண்மை செய்தி என்று நம்பினார்களோ ,அப்போதுதான் இவர்கள் பரிசுத்தமானவர்கள் என்று மக்கள் ஏமாந்தார்கள். இங்குதான் அரசியல் ஏமாற்றம் உங்களுக்கு ஏற்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் கார்ப்பரேட் பத்திரிக்கை ,தொலைக்காட்சிகள். இன்று அவர்கள் கார்ப்பரேட். நேற்று அவர்கள் கார்ப்பரேட் கிடையாது. அதுவும் சொல்கிறேன். தினத்தந்தி தலையில் தூக்கிக்கொண்டு, தெருத்,தெருவாக விற்ற பத்திரிக்கை. தினமலர் டீ கடைகளில் ,இலவசமாக போட்ட பத்திரிகை. பிறகு எப்படி கார்ப்பரேட் ஆனது? அரசியலுக்கு வந்து குறுக்கு வழியில் எப்படி பணம் சம்பாதித்தார்களோ,

அதே போல் தான், இந்த பத்திரிக்கை தொலைக்காட்சிகளும் குறுக்கு வழியில் எந்த நோக்கத்திற்காக பத்திரிக்கையும் எந்த நோக்கத்திற்காக அரசியலோ அது இல்லாமல் சுயநலத்தில் அரசியல் குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கும் இடமாக மாற்றி விட்டார்கள். மேலும், இந்த வரலாறு எல்லாம் தெரியாத வரை, பத்திரிக்கை துறைக்கே! ஏன் சமூக நலன் பத்திரிகைகளுக்கும் ஏமாற்றம்தான். இவர்கள் எல்லாம் அரசியலுக்குள் பத்திரிக்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் .

அரசியல் கட்சிக்குள் பத்திரிக்கை நடத்திக் கொண்டிருக்கிறாரகள். ஆனால், மக்களுக்காக பத்திரிகை இல்லை. மக்களுக்காக பத்திரிகை நடத்துவது போல் காட்டிக் கொள்கிறார்கள்.தவிர, மக்களின் வரிப்பணத்தில் சலுகை, விளம்பரங்களை அனுபவித்து விட்டு, அரசியல் அதிகாரத்திற்குள் பத்திரிக்கை நடத்தி பல கோடி சொத்துக்களை சம்பாதித்துக் கொண்டார்கள். எந்த அரசியலில் ஊழலை எதிர்த்து எழுதவேண்டுமோ ,அதை எழுதாமல் அவர்களை பாராட்டி, பலனடைந்தார்கள். இப்போதும் நாங்கள் தான் பத்திரிக்கை !செய்தி துறை எங்களுக்கு மட்டுமே என்று நல வாரியம் முதல் சலுகை விளம்பரங்கள் வரை பட்டா போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த உண்மை எல்லாம் நூற்றுக்கு 99 சதவீதம் செய்தித் துறை அதிகாரிகளுக்கே தெரியாது. ஏனென்றால், இவர்களும் அந்த கட்சியின் சிபாரிசில் வேலைக்கு வந்தவர்கள். ஒன்று அதிமுக சிபாரிசில் வந்திருப்பார்கள். இல்லையென்றால் திமுக சிபாரிசில் வந்திருப்பார்கள். நான் நிருபராக வேலை செய்யும்போது, எனக்கே இந்த உண்மைகள் எல்லாம் அப்போது தெரியாது. நான் மக்கள் அதிகாரம் பத்திரிக்கை 10 ஆண்டுகளாக நடத்திய போது தான், பல உண்மைகள் எனக்கே தெரிய வந்தது. அதை தான் மக்களுக்கு சொல்கிறேன். மக்கள் அரசியலில் விழிப்புணர்வு இல்லாதவரை, அரசியல் உங்களுக்கு ஏமாற்றமே!

மேலும்,எப்போது கொடியைப் பிடித்துக் கொண்டு, கட்சிக்காரர்கள் ஸ்டாலின் வாழ்க ,ஜெயலலிதா வாழ்க ,எம்ஜிஆர் வாழ்க ,என்று புகழ் பாடினார்களோ ,அப்பொதே இவர்கள் இவர்களுக்காக அரசியலுக்கு வந்திருக்கிறார்கள். இப்போது தளபதி வாழ்க என்று குரல் கொடுக்கிறார்கள். மேலும்,ஒரு அரசியல் கட்சி! மீட்டிங் போட்டால், நூறு பேர் சால்வை எடுத்துக் கொண்டு ஓடுகிறார்கள் கட்சிக்காரர்கள் .அது எதற்கு? அரசியல் அப்போதே சுயநலமாகிவிட்டது.நீங்கள் எந்த வேலைக்கு வந்தீர்களோ ,அந்த வேலையை மட்டும் தான் பார்க்க வேண்டும்.

அரசியல் கட்சிகளில் மக்களுக்காக உழைப்பவர்களை விட்டுவிட்டு ரவுடிகளையும் வெத்து வெட்டுகளையும் கொண்டு வந்து பதவி கொடுத்து எம்எல்ஏ ,மந்திரி ,எம்பி, ஆக்கியது ஊழல் அரசியல்! இது திமுக, அதிமுக அரசியல் கட்சிகள் செய்த வரலாற்றுப் பிழை. இப்படிப்பட்டவர்களை கொண்டு போய் பதவி அதிகாரத்தில் உட்கார வைத்தால் அவர்களுக்கு பதவி போதை வந்து விடுகிறது. எந்த மக்கள் வாக்களித்து பதவிக்கு வந்தார்களோ அந்த மக்களையே தங்கள் ரவுடியிசத்தால் அடிமைப் படுத்தினார்கள். இதையெல்லாம் இளைய

தலைமுறைகளும் வருங்கால அரசியல் எப்படி இருக்க வேண்டும் என்று தீர்மானியுங்கள். மேலும்,இந்த போதைக்கு அடிமையானவர்கள், மைக்கை பிடித்துக் கொள்கிறார்கள் .இவர்கள் மைக்கை பிடிக்கவில்லை என்றாலும், கார்ப்பரேட் தொலைக்காட்சிகள் மைக்கை நீட்டிக் கொண்டு நிற்கிறார்கள். அவர்களுக்கும் என்ன கேள்வி கேட்பது? என்று தெரியாமல் இன்றுவரை, இந்த பத்திரிக்கை துறையை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

உங்களைப் பற்றி ,இவர் இதை சொன்னாரு அவரு, அதை சொன்னாரு ,அதுக்கு என்ன பதில் சொல்றீங்க? இதுவாடா கேள்வி? இவர் எதற்கு வந்தார்? அந்த கேள்வியை கேளுங்கள். என்ன செய்தார்? அந்தக் கேள்வியை கேளுங்கள். இவர் அந்த கட்சிக்கு மாறினார் .இந்த கட்சிக்கு போனார் .எந்த கட்சிக்கு யார் போனால் என்ன? இவர்களுடைய சுயநலத்திற்கு அரசியல் ஆக்கிவிட்டார்கள்.நீங்கள் எதற்கு வந்தீர்கள்? அதற்கு பதில் சொல்லிவிட்டு போ!

இந்த அரசியல் போதைக்கு கார்ப்பரேட் ஊடகங்கள் ,அவர்கள் சொல்லும் பொய்களை எல்லாம் மக்களிடம் விளம்பரப்படுத்துகிறது. அவர்கள் என்ன சொன்னாலும் ,செய்தி என்றால் நீ எதற்கு? பத்திரிக்கை நடத்துகிறாய்? தொலைக்காட்சி நடத்துகிறாய்? உனக்கு எதற்கு? மக்களின் வரிப்பணத்தில் சலுகை, விளம்பரங்கள்? எப்படி இவையெல்லாம் நான்காவது தூண் என்று சொல்லிக் கொள்ள முடியும்?இது ஆழமான கேள்விகள் !இதற்குள் தான் உண்மைகள் ஒளிந்திருக்கிறது. இந்த உண்மைகள் தெரியாத வரை ஒவ்வொரு வாக்காளர்களுக்கும், அரசியல் ஏமாற்றுமே! ஏன் ?கிராமங்களில் பஞ்சாயத்து தலைவராக நிற்பவர்கள், எங்களைப் போன்ற அரசியல் தெரிந்தவர்கள், இல்லை என்றால் பணக்காரர்கள் *விஷயம்* தெரிந்தவர்கள் ,இவர்களையெல்லாம் ஓட்டு கேட்டு வரும் போது , ஒரு சால்வை ஒன்றை தூக்கிக் கொண்டு வருகிறார்கள் அல்லது ஒரு துண்டு ஒன்று எடுத்து வருகிறார்கள். அது எதற்கு? அந்த துண்டு போட்டால் மரியாதை வந்து விடுகிறதா? இல்லை மதிப்பு வந்து விடுகிறதா? இப்படி எல்லாம் ஒன்னும் தெரியாத ,உதவாத ஊரில் ஆடு மாடு மேய்த்துக் கொண்டு இருப்பவன் கூட, கட்சியில் சேர்ந்து ,இவர்களுக்கே இந்த அரசியல் போதை வந்து விடுகிறது என்றால்!

நகரங்களில் கட்சி கொடியை காரிலும் ,பைக்கிலும் காட்டிக் கொண்டு, போகின்ற இவர்களுக்கு எவ்வளவு போதை இருக்கும்? எவ்வளவு அரசியல் போதை இருக்கிறது? என்பதை மக்கள் சிந்தியுங்கள் .எதனால் ஊழல் வருகிறது ?என்றால்! அடிப்படையில் மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வு இல்லை . ஓட்டுக்கு எதற்காக பணம் கொடுக்கிறார்கள்? சில ஆயிரங்களை கொடுத்து பல கோடிகளை அரசியலில் வியாபாரம் செய்வதற்கு கொடுக்கிறார்கள். மக்கள் இன்னும்,கூட்டத்தைப் பார்த்து மயங்குகிறார்கள்.

அவர்கள் அரசியல் பதவி போதையில் தள்ளாடுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம், இந்த தொலைக்காட்சி, யூடியூப், கார்ப்பரேட் பத்திரிகைகள், சில சிறிய பத்திரிகைகளும் அவர்களின் தயவுவில் வண்டி ஓட்டுபவர்கள். அரசியல் பதவி போதை கலாச்சாரத்தில் தான் ஊழல் அதிகரித்தது. அதை கார்ப்பரேட் பத்திரிக்கை, தொலைக்காட்சிகள் அவர்கள் சொல்வதை நியாயப்படுத்தினார்கள். அங்கு தான் மக்களுக்கு !அரசியல் ஏமாற்றமாகியது. இப்போது ,மக்களுக்கு 50 சதவீதமாவது இந்த அரசியலைப் பற்றிய உண்மை புரிந்ததா? உண்மை தெரியாத வரை வாக்காளர்களுக்கு அரசியல் ஏமாற்றமே!

ஐஏஎஸ் அதிகாரி திவ்யா மிட்டல் தனது வேலையை ராஜினாமா செய்து, புதிய அரசியல் கட்சி தொடங்கியுள்ளார் – வரலாறு படைக்குமா? ஜன்நீதி பாரத் .

ஜன்நீதி பாரத் அரசியல் கட்சியை தொடங்கியுள்ள ஐ.ஏ .எஸ் அதிகாரி திவ்யா மிட்டல் 13 ஆண்டு காலம் ஐஏஎஸ் அதிகாரியாக பணியாற்றியுள்ளார். தற்போது வேலையை ராஜினாமா செய்து விட்டு, ஜன்நீதி பாரத் (தயவைொை டீாயசயவ) அரசியல் கட்சியை தொடங்கியுள்ளார்.

இந்த அரசியல் கட்சி மக்களை மையப்படுத்தி, மு ன ் னெ டு க ் கு ம ் அரசியல், குறிப்பாக மக்களுக்கான ஆட்சியாக தெரிவித்துள்ளார். மேலும், இவருடைய பின்னணி என்ன?
2013: ஐஏஎஸ் அதிகாரியாகப் பணியில் சேர்ந்தார்.

இவருடையகல்வி டெல்லி ஐஐடி (IIT Delhi), பெங்களூரு ஐஐஎம் (IIM Bangalore) ஆகிய நிறுவனங்களில் பயின்றவர். தவிர,பணியனுபவம் உத்தரப் பிரதேச மாநிலத்தில் மிர்சாபூர், தியோரியா, சந்த் கபீர் நகர் உள்ளிட்ட மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியராகப் பணியாற்றியுள்ளார்.ஆகஸ்ட் 30, 2026, ஐஏஎஸ் பணியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

பிறகு,செப்டம்பர் 15, 2026: அவரது ராஜினாமாவை உத்தரப் பிரதேச அரசு ஏற்றுக்கொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.மேலும், அக்டோபர் 15, 2026, புதிய அரசியல் கட்சியை அறிவித்து, 2027 உத்திரபிரதேச சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இவருடைய துணிச்சல் பாராட்ட வேண்டிய ஒன்று. ஒரு ஐஏஎஸ் படித்த பெண்மணி, அரசியல் கட்சியை தொடங்கி, ஒரே ஆண்டில்

சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவிப்பது, இவருக்குள்ள செல்வாக்கா? இல்லை பணமா? இல்லை மக்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையா? எது என்பது ?தேர்தலில் போட்டியிட்ட பிறகு தெரியுமா?

மத்திய அரசும் மாநில அரசும் இணைந்தே செயல்படுவோம் என்று பிரதமர் நரேந்திர மோடி இன்றைய மெட்ரோ ரயில் துவக்க விழாவில் தெரிவித்துள்ளார். அது மட்டுமல்ல, இருவர் கைகள் இணைத்தே திட்டத்தை துவக்கி வைத்துள்ளனர். மேலும்,

இவ் விழா ஐஐடி வளாகத்தில் நடைபெற்ற போது, தமிழக முதல்வர் விஜய், பிரதமர் மோடி இடம், தமிழ் மொழியை வழக்காடு மொழியாக சென்னை

செயல்பட வேண்டும் என்பது மிக முக்கியமானது. மேலும், கடந்ததிமுக ஆட்சி !மக்களுக்காக ஆட்சி நடத்த வேண்டும் என்று நினைத்திருந்தால்! ஆட்சியில் இருந்த ஐந்தாண்டு காலம், மத்திய அரசுடன் மோதல் போக்கை கடைபிடித்து இருக்காது.

ஆனால், அவர்களுக்காக ஆட்சி நடத்தும் போது, அது மோதல் போக்குடனே கடந்த ஐந்தாண்டு காலத்தையும், வீணடித்து விட்டார்கள். இப்போது

தமிழக மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்றால்! மத்திய அரசு உடன் மோதல் போக்கு இருக்கக் கூடாது. இது கடந்த திமுக ஆட்சியிலும், மக்கள் அதிகாரம் பத்திரிக்கை சார்பில் சொல்லப்பட்ட உண்மை செய்தி - ஆசிரியர்.

உயர்நீதிமன்றத்தில், கொண்டு வர கோரிக்கை வைத்துள்ளார். தவிர,கோதாவரி, காவேரி, நதிகள் இணைப்பு திட்டத்தை உருவாக்க கேட்டுக் கொண்டார். மேலும், தமிழகத்திற்கு கொடுக்க வேண்டிய 5110 கோடியை தருமாறு கேட்டுக் கொண்டார்.

இது ஒரு நல்ல விதமான வாய்ப்பு . முதல்வர் விஜய் இந்த வாய்ப்பை மக்கள் நலனுக்காக தமிழக நலனுக்காக பயன்படுத்த வேண்டும். இது அரசியல் கடந்து தமிழக நலன் மட்டுமே கருதி

விஜய் ஆட்சியிலும், அது போன்று இருக்க வேண்டும் என்று தான் தற்போதும், திமுகவுடன் இருந்த கூட்டணி கட்சிகளான கம்யூனிஸ்ட்டுகள் ,விசிக, காங்கிரஸ் ,போன்றவை நினைக்கிறது.

மேலும்,இவர்களுக்கு மக்களுக்கான நல்லாட்சி என்ன என்பதே தெரியாது. ஊடகங்களில் பேசிவிட்டு ,குறையை சொல்லி விட்டு, அல்லது இட்டுக்கட்டி அரசியல் பேசி விட்டு, போவதுதான் இவர்களின் வேலை. இதையும் செய்தி என்று தொலைக்காட்சிகள், பத்திரிகைகள் மக்களிடம்

சொல்லி, மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் அதிகாரம் பத்திரிகை என்பது மக்களுக்காக என்பதை மக்களிடம் தெளிவு படுத்திக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, மத்திய மாநில அரசின் செய்தி துறைக்கும், பாடம் எடுத்துக் கொண்டிருக்கிறது. என்னடா இது? அவ்ளோ பெரிய பத்திரிகையா? என்று கூட சில பத்திரிக்கை நிருபர்கள் கேள்வி எழுப்பலாம் . இது அவர்களுக்கும் சேர்த்து தான் இந்த பாடம் !ஏனென்றால்? இவர்களுக்கு தெரிந்தது, பெரிய பத்திரிகை என்பது பணம் தான், பெரிய பத்திரிக்கை! அதாவது ஒரு பத்திரிகையின் முதலீடு ஒரு 500 கோடி, நூறு கோடி ,ஆயிரம் கோடி ,இதுதான் பெரிய பத்திரிக்கை என்று எனக்கு அது பெரிய பத்திரிகை.

ஆனால், உண்மை அது இல்லை. உண்மையான செய்தியும், மக்களுக்கு தேவையான செய்தியும், மத்திய மாநில அரசுக்கு என்ன சொல்ல வேண்டும்? என்ற உண்மை செய்தியும் ,அதுதான் பெரிய பத்திரிகையின் செய்தி.மேலும்,ஆயிரம் கோடி பத்திரிக்கையில் உதவாத செய்திகள், உண்மையற்ற செய்திகள், மக்களுக்கு தேவையற்ற செய்திகள், ஆட்சியாளர்களை புகழ் பாடி ,அவர்களிடம் சலுகை, விளம்பரங்களை

அனுபவிக்கும் செய்திகள் போட்டு விட்டால் ,அது பெரிய பத்திரிகை அல்ல.இது பல பத்திரிக்கைகளை படிப்பவர்களுக்கு ,மக்களைப் பற்றி சிந்திப்பவர்களுக்கு, சமூக நலனைப் பற்றி பேசுபவர்களுக்கு, நாட்டின் நன்மை, தீமைகளை பற்றி சிந்திக்கும் அறிவாளிகளுக்கு, இந்த உண்மை தெரியும்.எனவே ,தமிழ்நாட்டு மக்களுக்கு மத்திய அரசின் மூலம் நிதி கிடைத்தால் தான், திட்டங்களை செயல்படுத்த முடியும். இப்போது முதல்வர் விஜய் பிரதமர் மோடியிடம் நிதியை 5000 கோடிக்கு மேல் கேட்டுள்ளார்.அப்படி என்றால், மத்திய அரசின் உதவி தேவை. மாநில அரசுக்கு தேவை.

ஆரம்பத்தில் இருந்து, திமுகவுக்கு மக்கள் அதிகாரம் பத்திரிக்கை செய்தி மூலம் ,இந்த உண்மைகளை எல்லாம் சொன்னாலும், அவர்களுடைய நோக்கம் கொள்ளையடிப்பதில் இருந்ததே தவிர, மக்களுக்கு என்ன செய்ய வேண்டும்? என்ற எண்ணம் இல்லை. மேலும்,விஜய்யிடம் எண்ணம் இருக்கிறது. ஆனால், அவருக்கு அடிப்படையில், அவருடைய குடும்ப வாழ்க்கையும், தொழிலும் சினிமாவாக இருந்து விட்டதால் ,அரசியல் என்பது அவருக்கு அனுபவம் குறைவாக இருக்கிறது.

தவிர ,இவர்களுடைய மந்திரிகள் சொல்வதை கேட்பதா? அதிகாரிகள் சொல்வதை கேட்பதா? யார் சொல்வதை கேட்பது? இந்த மனநிலையில் முதல்வர் விஜய் இருக்கிறார். மேலும்,மந்திரிகளே புரியாமல் இருக்கிறார்கள். அவர்களும் இன்னும் நிறைய படிக்க வேண்டி இருக்கிறது. எம்ஜிஆரும் நடிகர் தான் ,ஜெயலலிதாவும் நடிகை தான் ,ஆனால், எம்ஜிஆரை விட ஜெயலலிதா திறமைசாலி, அறிவாளி, இது பக்கத்தில் இருந்து பார்த்தவர்கள் சொன்ன உண்மை.

அதனால், ஒரு விதத்தில் விஜய் !மத்தியரசுடன், மோதல் போக்கை கடைபிடிக்காமல், மோடியுடன் இன்றைய மெட்ரோ ரயில் திட்டத்தை இருவரும் இணைந்து துவக்கி வைத்தது, மோடியுடன் கலந்து ஆலோசிப்பது, தமிழ்நாட்டு நலனுக்கு நல்லது.

நாட்டில் தேர்தல் ஆணையம் ஜனநாயகத்தின் முக்கிய அங்கம் !அதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் போராடுவது ,தேர்தல் ஆணையத்தின் நம்பகத்தன்மையை குறைக்கும் செயலாகும்.அது மட்டுமல்ல, இதில் பிஜேபி பிரதமர் மோடி மீது குற்றம் சுமத்துவது ,தேர்தல் ஆணையர் ஞானே‘ குமாரை பதவி விலக சொல்வது, இது அத்தனையும் எதிர்க்கட்சிகள், திட்டமிட்டு பொய்களை பரப்பும் போராட்டமாக தான் இருக்கிறது. மேலும்,

தேர்தல் ஆணையம் 13 கோடி வாக்காளர்கள் எப்படி நீக்கப்பட்டார்கள்? என்பது குறித்து விளக்கமாக அறிக்கை வெளியிட்டுள்ளது.அதாவதுஇடம் பெயர்ந்தவர்கள் 6.3 கோடி, இறந்தவர்கள் 2.8 கோடி, இரு இடங்களில் ஓட்டு வைத்திருந்தவர்கள்1. 02 கோடி, கண்டறிய முடியாதவர்கள் 3.01 கோடி, இதர காரணங்களுக்காக 26 லட்சம், மொத்தம் 13 .39 கோடி நீக்கப்பட்டுள்ளது.மேலும், தகுதியுள்ளவர்கள் விடுபட்டிருந்தால்

எதிர்க்கட்சிகள் எஸ். ஐ ஆர் (SIR) வாக்காளர்கள் நீக்கத்திற்கு ! தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை பதவி விலகவும், நீக்கப்பட்ட வாக்காளர்கள் மீண்டும் சேர்க்க போராடுவது, தேர்தல் ஆணையத்தின் நம்பகத் தன்மையை குறைப்பதா?

விண்ணப்பிக்கலாம் என்று தேர்தல் ஆணையம், தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதைப் பற்றிய உண்மை , தன்மையை ஆராய்வது விட்டு ,விட்டு, தேர்தல் ஆணையத்தின் மீதும் ,ஆளும் கட்சியான பிஜேபி மீதும், போராட்டம் நடத்துவது தவறான வேலை.அதிலும்சி.ஜே.பி என்ற காக்ரோச் கட்சி மாணவர்கள் போராட்டம் என்ற பெயரில் இக்கட்சியினர் மாணவர்களை ஏமாற்றுகிறார்களா? 40 முதல் 50 வயது வரை உள்ளவர்கள் எப்படி மாணவர்களாக இருக்க முடியும்? மேலும் இவர்களுக்கு நிதி உதவி எங்கிருந்து வருகிறது? இந்த நிதி உதவி தீவிரவாத இயக்கங்களிடமிருந்து இவர்களுக்கு நிதி உதவி வருவதாக உளவுத்துறை ரிப்போர்ட்.

இது தவிர, இது தேர்தல் ஆணையத்தின் தேர்தல் மூலம் தான் காங்கிரஸ் கட்சி கேரளாவில் ஆட்சி பிடித்து உள்ளது. அப்போது இவர்கள் ஜெயித்தது தவறானதா? அதாவது இவர்கள் வெற்றி பெற்றால் தேர்தல் ஆணையம் சரியாக செயல்படுகிறது இவர்கள் தோல்வி அடைந்தால் தேர்தல் ஆணையத்தின் மீது குற்றம் சுமத்தி பொதுமக்களை குழப்புவது அல்லது ஏமாற்றுவது இது எத்தனை நாளைக்கு முடியும்? மேலும்,

ஏற்கனவே, எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி ,கைது செய்யப்பட்டு, விடு விக்கப் பட்டார்கள் .இப்போது மீண்டும் போராட்டம் என்றால், கைது செய்யப்பட்டு விடுவிக்கப்படுவது, தவறான வேலை. இனி ஒரு முறை போராட்டம் என்றால் இவர்களை நான் பெயில் செக்‘னில் (யெயப யளயடையடிடந ளநஉவழைெ)ல் போட வேண்டும்.

எனவே, இந்தப் போராட்டத்தில், அரசியல் செய்வது, சுயநல நோக்கத்தில் எதிர்க்கட்சிகள் செயல்படுகிறார்கள், என்பது தான் சமூக ஆர்வலர்களுக்கு தெரிவிக்கும் உண்மை.

பி.சி.ஆர்(PCR act) சட்டம் தீண்டாமையை ஒழிக்க கொண்டு வந்த சட்டம். இந்த இரண்டு சட்டத்தையும் மற்ற சமூகங்களை பழிவாங்க பயன்படுத்தப் படும் சட்டமா?

ஒரு சமூகத்திற்கான பாதுகாப்புச் சட்டம், மற்றொரு சமூகத்தைச் சேர்ந்த நிரபராதிக்கு அநீதி இழைப்பதற்கான அனுமதியாக மாறக் கூடாது.சட்டம் என்பது ஒரு நீதியின் தராசு. இதில் எஸ்சி. எஸ்டி. வன்கொடுமை சட்டத்திற்கும்,(The Scheduled Castes and the Scheduled Tribes (Prevention of Atrocities) Act- 1989.)

குடியுரிமை பாதுகாப்பு சட்டத்திற்கும் வேறுபாடு உள்ளது. (ீசழவநஉவழைெ ழக உைைடை சபைாவள யஉவ) இதில் காவல்துறையும், இந்த சட்டத்தை சரியாக படிக்காமல் ஒருவர் தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியின சமூகத்தை சேர்ந்தவர் என்பதால், அவர் கொடுக்கும் புகாரை பதிவு செய்து அவர் மீது எஃப் ஐ ஆர் போட்டு விடுகிறார்கள்.

அதாவது விசாரணை இன்றி ,ஆதாரம் இன்றி, எஃப் ஐ ஆர் போடுவது, அதாவது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது, சட்டப்படி தவறானது. ஆனால், இந்த சட்டத்தில் அதாவது எஸ்சி எஸ்டி வன்கொடுமை சட்டத்தில் தான் ஒருவர் அவமதிக்கப்பட்டார், ஜாதி பெயரை சொல்லி திட்டினார், அல்லது வேறு சில காரணங்களுக்காக இதை பயன்படுத்தினால், உடனே எப்.ஐ.ஆர் போட்டு விடுகிறார்கள்.

இப்படிதான் பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்களிடையே தற்போது தென் மாவட்டத்தில் இந்த பிரச்சனை ஏற்பட்டு படிக்கக்கூடிய இரு சமூகத்தினர் இடையே, ஒரு பிரிவினையை உருவாக்கி ,ஜாதி மோதலை உருவாக்கி இருக்கும் ,இந்த சட்டம்! படிக்கும் மாணவன் மீது, இந்த சட்டத்தை போட்டு இருக்கிறார்கள்.

இது இப்போது தென் மாவட்டங்களில் மிகப்பெரிய போராட்டமாக உருவெடுக்கிறது. இதை நீக்க வேண்டும் என்று போராடுகிறார்கள். உண்மையிலே இந்த இரு சட்டங்களும் இன்றைய காலகட்டத்திற்கு இது தேவையா? என்பது குறித்து உச்ச நீதிமன்றமும், நாடாளுமன்றமும் விவாதிக்க வேண்டிய கட்டத்தில், இந்த சட்டம் உள்ளது.

மேலும்,அம்பேத்கர் கொண்டு வந்த அத்தனை சட்டங்களும், இந்த காலத்திற்கு ஏற்புடையது அல்ல. அது அவருடைய காலத்திற்கு மட்டுமே ஏற்புடையது என்று பலமுறை மக்கள் அதிகாரத்தில் இதை எழுதியிருக்கிறோம்.

தற்போது ஜாதி அரசியல் கட்சிகளை வைத்துக்கொண்டு, அதாவது திருமாவளவன் போன்ற சுயநல மிக்கவர்கள் ,அரசியல் கட்சிகளில் ஜாதி அமைப்புகளை உருவாக்கிக் கொண்டு, ஜாதிக்காக குரல் கொடுப்பவர்கள் என்ற தோரணையில், ஜாதி கட்சி எப்படி ?மற்ற ஜாதிக்காக இவர்கள் பேசுவார்கள்? நிச்சயம் பேச முடியாது.

இது ஒரு புறம் இருக்கட்டும். இவர்கள் பேசும் நியாயம் ஜாதியை ஒழிக்க வேண்டும் என்பார்கள். ஆனால், அதே ஜாதி பெயரை சொல்லி திட்டிவிட்டான் என்று பொய் புகாரை கொடுக்கிறார்கள். அடுத்தது, அரசியல் அதிகாரத்திற்கு வர நினைப்பவர்கள், அப்போது மட்டும் மற்ற சமூகங்களின் ஓட்டு தேவைப்படுகிறதா? என்பது மற்ற சமூகங்களின் கேள்வி? மேலும் , இப் பிரச்சனை ஊடகங்களில்

பெரிய அளவில் செய்திகள் வெளி வரவில்லை என்றாலும், சமூக ஊடகங்களில் இது அதிக அளவில் மக்களிடம் பேசப்பட்டு வரும், செய்தியாக உருவெடுத்துள்ளது. அது மட்டுமல்ல,

இப்போது இந்த ஜாதி போராட்டத்தில், பல சமூகங்கள் குறிப்பாக தேவர் ,வன்னியர், நாடார், நாயுடு, ரெட்டியார்,முக்குலத்தோர், உடையார் ,விஸ்வகர்மா, முதலியார், செட்டியார்,போன்ற அனைத்து பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களும், ஒன்றாக இணைந்து இந்த சட்டத்தை நீக்க வேண்டும் என்று குரல் கொடுத்து,இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

மேலும் ,தமிழக முதல்வர் விஜய்க்கும் இந்த கோரிக்கையை தங்களது போராட்டத்தின் மூலம் வைக்கிறார்கள். இது ஒரு பக்கம் அரசியல்! மற்றொரு பக்கம் ஜாதி பிரச்சனை, இதற்கிடையில் இந்த சட்டம் மாட்டிக் கொண்டு, தவறான நடைமுறையில் ,காவல்துறை இந்த சட்டத்தை வழக்கு பதிவு செய்து, நிரபராதிகள்!

இந்த சட்டத்தின் மூலம் அவர்கள் தண்டிக்கப்படுகிறார்களோ ,இல்லையோ, ஆனால், இந்த வழக்கு பதியப்பட்டவுடன் ,அவர்களை உடனே கைது செய்து விடுவது, அதற்கு ஜாமீன் மறுப்பது, பல ஆண்டுகள் இந்த வழக்கை நீதிமன்றத்திலே, நடத்திக் கொண்டு ,அவர்களுடைய குடும்பத்தையும் ,அவர்களுடைய தொழிலையும் வேதனைக்கு உள்ளாக்குவது மட்டுமல்ல, இதன் மூலம் அவர்களுக்கு பொருளாதார இழப்பையும் உருவாக்குகிறது இந்த சட்டம்.

மேலும்,இது தவிர இளைஞர்கள் மீதோ, அல்லது மாணவர்கள் மீதோ ,இந்த சட்டம் பதியப்பட்டால் ,அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கிறது. அவர்கள் எந்த அரசு வேலைக்கும், போக முடியாத அளவுக்கு, இந்த சட்டம் ஒருவரை பாதிக்கிறது. அடுத்தது, தவிர,ஒருவர் அரசு கடைநிலை ஊழியராக இருப்பார். அவர் அதே அலுவலகத்தில்

பணிபுரிய கூடிய ஒரு உயர் அதிகாரி மீது, எஸ்சி .எஸ்டி. வன்கொடுமை சட்டத்தில் புகார் அளித்தால் உடனே அவரை கைது செய்வது அல்லது அவரை பழிவாங்கி பதவி நீக்கம் செய்வது உள்ளிட்ட அனைத்தும் இன்றைய காலகட்டத்திற்கு இது தவறான சட்டம்.

இந்த சட்டத்தை நாடாளுமன்றமும்,உச்சநீதிமன்றமும் இதற்கு என்ன தீர்வு எடுக்க வேண்டுமென்றால்? உடனடியாக கைது?, உடனடியாக எஃப் ஐ ஆர் போடுவது?, விசாரிக்காமல் கைது செய்வது குற்றம், நிருபிக்கப்படாமலே தண்டிப்பது இதையெல்லாம் நீக்க வேண்டும். தவறான வழக்கு பதிவு செய்யும் காவல்துறை அதிகாரிகளையும்,இந்த சட்டத்தில் அவர்களுக்கும் தண்டனை கொடுக்கப்பட வேண்டும்.

இது தவிர ,பொய் புகார் கொடுப்பவர்கள் மீது இந்த சட்டம் அவர்களுக்கு எதிராக தண்டனை கொடுக்க வேண்டும். அதாவது, சட்டம் என்பது முதலில் சொன்னது போல்!ஒரு நீதியின் தராசு !அந்த தராசு யார் தவறு செய்தாலும், அது தண்டனை வழங்கும். அதனால் தான், அதற்கு நீதி தேவதை தன்னுடைய கண்ணை கட்டிக்கொண்டு ,தராசை கையில் பிடித்துக் கொண்டிருக்கிறார்.

அப்படி பார்க்கும்போது ,பொய்யான புகார்கள் அளிப்பவர்கள் மீது அவர்கள் தான் முதலில்

குற்றவாளியாக கருதி ,அவர்களை சிறையில் அடைக்க வேண்டும். அப்போதுதான் இந்த சட்டம் மூலம் கொடுக்கப்படும் பொய் புகார்கள் ஒழிக்க முடியும். அவர்களை விட்டு,விட்டு நிரபராதிகளுக்கு தண்டனை கொடுப்பது சட்டத்தின் சமநிலை தீர்ப்பு அல்ல. மேலும்,இதைதான் மற்ற சமூகங்கள் வலியுறுத்தி நாடாளுமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் பேச வேண்டிய முக்கிய கருத்து சட்டமாக்கப்பட வேண்டும்.

இது தவிர, உச்ச நீதிமன்றமும், நாடாளுமன்றமும், முக்கியமாக இந்த சட்டம் குறித்து ,நாட்டில் விரிவான ஆய்வு அறிக்கை எடுக்க வேண்டும். அது என்ன என்றால்? ஒவ்வொரு மாநிலத்திலும், ஒவ்வொரு மாவட்டம் தோறும், எத்தனை பிசிஆர் வழக்குகள்? எத்தனை எஸ்ஏஸ்டி வன்கொடுமை வழக்குகள் பதியப்பட்டுள்ளது ?அதனுடைய தரவுகள் எத்தனை உண்மையானது ?எத்தனை பொய்யானது ?இது அத்தனையும் எடுத்து பேசப்பட வேண்டிய முக்கிய கருத்து.

இதற்குப் பிறகு, தாழ்த்தப்பட்ட சமுதாயமும், பட்டியலின சமுதாயமும், இந்த சட்டம் குறித்து வாய் திறக்க கூடாது. ஏனென்றால், உண்மையான தரவுகள் வைத்து உச்ச நீதிமன்றமும், நாடாளுமன்றமும் ,இந்த சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும்.

இங்கே ஜாதி அரசியல் கட்சிகள் முதல் ஜாதியை சங்க அமைப்புகள் வரை ,எங்களை பழிவாங்க பிஜேபி கொண்டு வந்த சட்டம் என்று பேசிக்கொண்டு இருப்பார்கள். ஆனால், நீங்கள் மற்ற சமூகங்களை இந்த சட்டத்தின் மூலம் பழிவாங்க உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது?

மேலும்,அம்பேத்கர் மற்ற சமூகங்களை பழிவாங்க இந்த சட்டத்தை கொடுத்துவிட்டு போனாரா? என்பதுதான் மற்ற சமூகங்களின் கேள்வி? இதற்கு தீர்வு காண வேண்டியது உச்ச நீதிமன்றமும், நாடாளுமன்றமும் இணைந்து தீர்வை ஏற்படுத்துமா? என்பதுதான் மற்ற சமூகங்களின் முக்கிய கோரிக்கை.

தனியார் மருத்துவ மனைகளின் கட்டண விவரம் மக்களின் பார்வைக்கு வைப்பது மருத்துவமனையின் கட்டண கொள்ளையை தடுக்க முடியுமா?இந்த திட்டம் மத்திய அரசின் திட்டமாக இருந்தாலும், மாநில அரசு !அதற்கு முழு கண்காணிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான், தனியார் மருத்துவமனையின் கட்டண கொள்ளையை தடுக்க முடியும்.

மேலும்,வெறும் கட்டண விவரங்களை பலகையில் எழுதி வைத்துவிட்டு, உள்ளே ஒரு கட்டணத்தை போட்டு வைத்தால் நோயாளிகள் என்ன செய்வார்கள்?

தனியார் மருத்துவமனைகளில் கட்டண விவரங்களை மக்களின் பார்வைக்கு தெரிவிக்க மத்திய அரசின் உத்தரவு கட்டண கொள்ளை தவிர்க்க முடியுமா?

தவிர ,மருத்துவ காப்பீட்டு, திட்டத்தின் மூலம் நோயாளிகளிடம் இருந்து கொள்ளையடிக்கும் திட்டமாக தனியார் மருத்துவமனைகள் ,இதை பயன்படுத்துகின்றனர் .அதனால், நோயாளிக்கு என்னென்ன மருத்துவம் செய்யப்பட்டது? அதன் விவரம் ?அதற்கான தொகை விவரம்?

எல்லாம் சரியான முறையில் நியாயமான தொகை போடப்பட்டதா? என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டும். அப்போதுதான் இந்த தனியார் மருத்துவமனையின் கட்டண கொள்ளையிலிருந்து பொதுமக்கள் விடுபட முடியும் .

இது தவிர, மருந்து பொருட்கள் வெளியில் இருந்து வாங்கும் மருந்துக்கும் இவர்கள் உள்ளே கொடுக்க மருந்துக்கும், வேலை வித்தியாசம் அதிகமாக இருக்கிறது. கேட்டால், கம்பெனி வித்தியாசம் என்று சொல்லிவிடுகிறார்கள்.

ஒரு மனிதன் தனியார் மருத்துவமனைக்கு சென்றால், அவனிடம் இருந்து பல லட்சங்களை பெறுவதிலே மருத்துவமனை குறிக்கோளாக இருக்கிறது. அந்தக் கொல்லையை, மத்திய அரசு மாநில அரசும் இணைந்து செயல்பட்டால் தான் தனியார் மருத்துவமனை கொல்லையில் இருந்து மக்களை பாதுகாக்க முடியும்.

எல். முருகனுக்கு முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தயவால், பிஜேபியில் என்.சி.எஸ்.டி (ஹேஊஞுவு) தேசிய பட்டியல் இன ஆணையத்தின்

எல் முருகன் ராஜினாமா செய்தி வந்தபோதே, அது பறிப்பாக இருக்கும் என்று மக்கள் அதிகாரத்தில் செய்தி வெளியிட்டிருந்தோம். தற்போது அது உண்மையே !

வைஸ் சேர்மன் (vice - chairman) ஆக முதலில் பொறுப்பு வகித்தார்.அதிலேயே நன்றாக சம்பாதித்தார் என்ற தகவல் எங்களுக்கு வந்தது.

அதன் பிறகு, முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் சொன்னால் மோடி தட்ட முடியாது என்பதை உணர்ந்த முருகன் அவரை பிடித்துக் கொண்டார். இவருக்கு மாநில தலைவராக தமிழ்நாட்டில் நியமனம் செய்கிறார்கள்.பிறகு இவர் தமிழ்நாட்டின் பிஜேபி மாநில தலைவராக

பொறுப்பேற்று பணியாற்றுகிறார். அப்போதும், இவருடைய அரசியல் குறுகிய வட்டமாக தான் இருந்துள்ளது. பெரும்பாலும் தமிழ்நாட்டின் பிஜேபி தலைமை வகிக்கக்கூடியவர்கள் குறுக்கே வட்டத்திலே செயல்பட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கான சமுதாயம் , மற்றும் பணம் பண்ணும் வேலை இதை மட்டுமே பார்த்துள்ளார்கள். கட்சி வேலை என்பது கடமைக்கு பார்த்துவிட்டு போனவர்கள் தான் அதிகம். மேலும்,

பிஜேபியின் கொள்கை, செயல்பாடு ,எதுவுமே நிறைவேற்றுவதில்லை. ஒரு பொது பிரச்சனையை கொண்டு சென்றால், அதற்கான தீர்வு ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு இவரோ, இவருக்கு அடுத்து வந்தவர்களோ செயல்பட்டது இல்லை. எல்லாமே பணத்தை மட்டுமே குறிக்கோளாக கொண்டு செயல்பட்டுள்ளார்கள்.தற்போது முருகன் பல ஆயிரம் கோடிகள் இவரிடம் இருப்பதாக கட்சி வட்டாரம் பேசுகின்ற தகவல். எப்படியோ ஒன்றுமே இல்லாத, இருந்த முருகனை பிஜேபி இந்த அளவுக்கு இவரை உயர்த்தி இருப்பது, வாழ்நாள் முழுதும் நன்றி கடன் செலுத்துவாரா? நிச்சயம் இருக்க மாட்டார்.

ஏனென்றால், இவரைப் பற்றிய தகவல்கள் ஒரு சில தான் சமூக ஊடகங்களில் வருகிறது. உண்மை இன்னும் பல பேருக்கு தெரியாமல் தான் இருக்கிறது. இவர் வழக்கறிஞராக பணியாற்றிய போது, ஒரு சில அதிகாரிகள் எனக்கு நெருங்கிய நண்பர்கள், அவர்கள் சொல்லுவார்கள்.ராஜேந்திரன் நீங்களாவது உட்கார்ந்த எங்களோடு சரிசமமா பேசுறீங்க, எல்.முருகன் உட்கார சொன்னால் கூட உட்கார மாட்டார். கையைக் கட்டிக் கொண்டே நின்று கொண்டிருப்பார். அவர்களுக்கு டீ ,வடை வாங்கி வந்து கொடுப்பார் என்று சொல்வார்கள்.

இது எப்போது என்னிடம் சொல்கிறார்கள்? என்றால், இவர் மந்திரியான பிறகு, இந்த வி'யத்தை என்னிடம் சொல்கிறார்கள். அவர்கள் சொல்லும்போது, ஒரு சில வி'யத்தை சொன்னார்கள். எல்லாவற்றையும் சொல்ல முடியாது. இவர் **கஷ்டப்பட்டு** லா (LAW) முடிப்பதற்கு மூன்று வருடம் சென்னையில் ஒரு வீட்டில் தங்கி படித்துள்ளார். அந்த வீட்டிலே தான் சாப்பிட்டு உள்ளார். அவர்களும் ஒரு நடுத்தரமான குடும்பத்தை சார்ந்தவர்கள். இவர் மந்திரியான பிறகு, அந்தக் குடும்பத்தை பற்றி நினைத்துக் கூட பார்க்கவில்லையாம் . அப்படிப்பட்ட ஒரு நபர் முருகன். இது தெரியாத பிரதமர் நரேந்திர மோடி ,இவருக்கு ஜாதியை பார்த்து மிகப்பெரிய பொறுப்புகளை கொடுத்து விட்டார். அதனால் ,பிஜேபிக்கு ந'ட்டம் !முருகனுக்கு லாபம். இன்னும் சொல்லப்போனால், பிஜேபி கட்சியை தமிழ்நாட்டில் ஒவ்வொருவரும், தங்கள் சுயநலத்திற்கு தான் பயன்படுத்திக் கொண்டார்கள். பொதுநலத்திற்கு பிஜேபி அரசியல் கட்சியை பயன்படுத்தி இருந்தால் ,இந்நேரம் தமிழ்நாட்டில் அது ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு வளர்ந்து இருக்கும்.

மேலும்,பொன் **ராதாகிருஷ்ணனிலிருந்து** தமிழிசை சௌந்தரராஜன், எல். முருகன் மற்றும் அண்ணாமலை, நயினார் நாகேந்திரன் வரைக்கும், இங்கே பிஜேபி அரசியல் கட்சியை தங்களுடைய சுயநலத்திற்கு தான் பயன்படுத்திக் கொண்டார்கள். இதில் அண்ணாமலை கூடுமானவரைக்கும் அதிமுக, திமுகவுக்கு எதிரான ஒரு செயல்பாட்டை அரசியலில் எடுத்தார். இதில் பாதி பேர் அதிமுகவுக்கு ஆதரவாகவும் ,பாதிபேர் திமுகவுக்கு ஆதரவாகவும் ,பிஜேபியிலே இருந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் அவர்களிடம் பணம்

சம்பாதித்தார்கள். இறுதியாக அண்ணாமலை டிஎம்கே ஃபைல் (DMK FILES) என்று வெளியிடும்போது, அண்ணாமலையை டிஎம்கே (னுஆமு)விலைக்கு வாங்கி விட்டார்கள் என்று தான் தகவல் வெளி வருகிறது. இது ரகசிய டீலிங் ,பல அமைச்சர்களிடமிருந்து அண்ணாமலைக்கு பணம் போனதாகவே தகவல்.மேலும்,ஒரு நேர்மையான அரசியல் கட்சி! ஊழலற்ற அரசியல் கட்சியை, தமிழ்நாட்டில் எப்படி மறைமுக ஊழல் கட்சிகளோடு கூட்டு சேர்ந்து பயணித்தார்கள்? என்பதுதான் உளவுத்துறை ரிப்போர்ட் பிரதமர் நரேந்திர மோடிக்கு போயிருக்கிறது என்ற தகவல்.

இப்போது ஒட்டு மொத்தமாக தமிழ்நாட்டு பிஜேபியை கலைப்பதாக தகவல் வெளி வருகிறது. அது மிகவும் எதிர்கால பிஜேபியின் வளர்ச்சிக்கு நல்லது. புது இளைஞர்கள் ,கொள்கை பிடிப்பு உள்ளவர்கள் ,சமூக அக்கறை உள்ளவர்கள், அவர்களை வழி நடத்தக்கூடிய தலைவர்கள் தமிழ்நாட்டு பிஜேபிக்கு தேவை!

இன்று இணையதளத்தின் பயன்கள் மக்களிடம் அதிக அளவில் இருந்து வருகிறது. அதாவது பண பரிமாற்றத்தில் இருந்து பொருள் வாங்குவதிலிருந்து விற்பதிலிருந்து இன்றைய இணையதளத்தின் பயன்பாடு மக்களிடம் அதிக அளவு இருந்து வருகிறது.இது இது குறித்து மக்கள் அதிகாரம் தொடர்ந்து இணையதளத்தின் முக்கியத்துவத்தை செய்தி துறைக்கு வலியுறுத்தி வருகிறது.மேலும், மனித வாழ்க்கையில் டிஜிட்டல் உலகத்திற்கு டிஜிட்டல் உலகத்தில் வரக்கூடிய பத்திரிகைகளுக்கு தகுதி இருக்கிறதா? என்பதை அதற்கான ஆய்வு தான் மிக முக்கியமானது. எவ்வளவு பேர் படிக்கிறார்கள்? தினமும் என்னென்ன செய்திகள்? இணையதளத்தில் கொண்டு வருகிறார்கள்? இது முதல் ப்ராசஸ். இந்த செய்திகளுக்கான முக்கியத்துவம் மத்திய ,மாநில அரசுக்கு !அடுத்தது இந்த செய்திகளுக்கான முக்கியத்துவம் மக்களுக்கு! அடுத்தது, அதன் பயன்கள் !இந்த செய்திகளின் உண்மை தன்மை ,உறுதி செய்ய வேண்டியது மிக முக்கியமானது.

உதாரணத்துக்கு தற்போது மத்தியில் எதிர்க்கட்சிகளின் போராட்டம் தேர்தல் ஆணையத்திற்கு எதிராக நடத்திக் கொண்டிருக்கிறார்கள் .அது குறித்து தொடர்ந்து செய்திகளை மக்கள் அதிகாரத்தில் செய்தியை வெளியிட்டிருந்தோம். மேலும்,தேர்தல் ஆணையம் ஏன் 13 கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டார்கள் என்ற காரணத்தை சொல்லி விட்டார்கள். அதில் உண்மை தன்மையில்லாமல் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுப்பது மக்களை முட்டாளாக்கும் அரசியல் என்று மக்கள அதிகாரம் செய்தியை வெளியிட்டுள்ளது. இதுபோல், மக்களுக்கான செய்திகள் நடுநிலைத் தன்மையோடு இருப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்

இணையதள பத்திரிக்கைக்கு அங்கீகாரம் மற்றும் விளம்பரங்கள் கொடுப்பதில் செய்தி துறைக்கு குழப்பமா? – மக்கள் அதிகாரம் .

இணையதள பத்திரிகை அலட்சியமானது. அதனால்,இன்றைய காலகட்டத்திற்கு செய்தித் துறையில் அதற்கான அங்கீகாரத்தை கொடுக்கணும்.அதை அவர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

அதை எப்படி ப்ரோஸ்ஸ;(process) செய்வது என்பது தான் இப்போது அவர்களுக்குள் ஒரு சிக்கல். தவறாக செய்துவிட்டால், தேவையற்றவர்களும் அதில் உள்ளே வந்து விடுகிறார்கள் என்பது அவர்களுடைய கருத்து நியாயமானது. முதலில்

மேலும்,சினிமா செய்திகளையும், நடிகைகளின் கவர்ச்சி படங்களை வைத்து போட்டால் ,இன்றைய இளைஞர்கள் அதிகம் பேர் பார்ப்பார்கள், இணையதளத்திற்குள் வருவார்கள் . இப்படிப்பட்ட கவர்ச்சி செய்திகளை எல்லாம் போட்டு ,அதற்குள் ரீல்ஸ் போட்டு, இணையதள பார்வையாளர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது.அது மட்டுமல்ல, பத்திரிக்கையில் காதல் ஜோடிகள் ஓடிப்போனது. கள்ளக்காதல் வரலாறுகள்

இதற்கெல்லாம் , பத்திரிக்கை சர்குலேஷனில் கொண்டு வருவது போல்,செய்தித்துறை ! கொண்டு

வரக்கூடாது.மேலும்,சினிமா செய்தியை போட்டு விட்டு, நடிகைகளை அரைகுறை ஆடைகளோடு போட்டு விட்டு, அதுவும் செய்தி என்றால், இங்கே அதற்கு இடமில்லை .அப்படி போட்டால், ஒரே நாளில் 10 லட்சம் பேர் கூட பார்ப்பார்கள். மேலும் ,இது மக்களுக்கான பத்திரிக்கை என்பதை உறுதி செய்ய வேண்டும் .

அடுத்தது, அரசு செய்தி என்பது தனி ட்ரேக் .அது மத்திய அரசு செய்தியாக இருக்கலாம், மாநில அரசு செய்தியாக இருக்கலாம் .மேலும் ,ஒரு செய்தியை ஒருவர் காப்பி அடித்து போடுகிறார் என்றால் ,காப்பி அடித்து போட்டவர் ,எந்த நேரத்தில் அதே செய்தியை போட்டு இருக்கிறார்? அதுவும் அந்த நேரமும்? அதிலே எடுக்கலாம், நிமி'ங்கள் கூட , அதில் கிடைக்கும் .ஒரு நிமி'த்துக்கு முன்னாடி இவர் போட்டார் .இந்த செய்தியை அஞ்சு நிமி'

த்துக்கு முன்னாடி அவர் போட்டார். அதனால், இணையதள செய்திகளை பத்திரிக்கையில் காப்பி அடித்து போடுவது போல, இதில் போட முடியாது. அடுத்தது, இதில் வாசகர்கள் அப்படி போட்டாலும், படிக்க மாட்டார்கள் இது முழுக்க, முழுக்க இணையதளத்தை பார்ப்பவர்கள் ,படிப்பவர்கள் ,அதற்கான இணையதள நாலெட்ஜ் (knowledge) உள்ளவர்கள்.அதனால் ,இதை படிப்பவர்கள் ,பெரும்பாலும், படித்தவர்கள், படித்த இளைஞர்கள் , இளைய தலைமுறைகள், அதிகாரிகள் ,அரசு ஊழியர்கள், படித்த பட்டம் பெற்றவர்கள், இப்படி அறிவை கொண்டு வாழ்பவர்கள். அவர்கள்தான் அதிகம், இந்த டிஜிட்டல் உலகத்தை பயன்படுத்துகிறார்கள் .இருப்பினும்,இன்று மாடு மேய்ப்பவர்களிடமும் செல்போன் இருக்கிறது .குருவிக்காரர்களிடமும் செல்போன் இருக்கிறது. கிராமங்களில் இருளர் சமுதாயத்திடமும், இன்று செல்போன் இருக்கிறது .அந்த நிலைமைக்கு வந்து விட்டார்கள். அவர்கள் பிள்ளைகள் பள்ளிக்கு செல்கிறார்கள். கல்லூரிக்கு செல்கிறார்கள். அவர்களும் இந்த செய்திகளை பார்க்கிறார்கள். அதனால், செல்போன் உபயோகம்

எந்த அளவுக்கு மக்களிடம் சென்றுள்ளது ?என்பதுதான் மிக முக்கியமானது.மேலும், இது கத்தி போன்றது .கத்தியை காய்கறி வெட்டவும் பயன்படும். அதே கத்தி கொலை செய்யவும் பயன்படும் என்ற நிலையில் தான் ,இந்த டிஜிட்டல் உலகத்தில், இணையதள தவறான செய்திகள், தவறான பிரச்சனையை உருவாக்கும் .அதில் மாற்று கருத்து இல்லை .

இதில் ஒவ்வொரு செய்தியும் ,உண்மைத்தன்மை இருப்பதை செய்தி துறை உறுதி செய்ய வேண்டும் .அது அரசாங்கமே தவறு செய்தாலும், அல்லது மக்களே தவறு செய்தாலும் அதை சுட்டிக் காட்டக்கூடிய செய்தியாக அது இருக்க வேண்டும் .அடுத்தது என்டர்டைன்மென்ட் செய்திகள், அதாவது பொழுதுபோக்கு செய்திகள் எல்லாம் போட்டுவிட்டு, அதுவும் இணையதள பத்திரிக்கை

என்று அச்சு ஊடகத்தில்,கணக்கு காட்டக் கூடிய பத்திரிக்கைகள் போல இதில் முடியாது. எனவே ,அப்படிப்பட்ட செய்திகளுக்கு முக்கியத்துவம் தரக்கூடாது.

மேலும், இங்கே செய்திக்கு தான் முக்கியத்துவம். அதன் ஃபீட்பேக் முக்கியத்துவம் .ஆனால் ,பத்திரிகை பிரிண்ட் மீடியாவில், அச்சடிப்பது தான் முக்கியத்துவம் என்று சட்டத்தை வைத்திருந்தார்கள் .அதை எவ்வளவு பேர் பார்க்கிறார்கள்? எவ்வளவு பேர் வாங்கி படிக்கிறார்கள்?அதுதான் **சர்குலேஷன்** ஆக இருக்க வேண்டும் .ஆனால், அச்சடிப்பதே **சர்குலேஷன்** என்று கார்ப்பரேட்டுக்கு சாதகமான ஒரு சட்டத்தை அரசாங்கம் அப்போது கொண்டு வந்தது .அது ஒரு தவறான சட்டம். ஆனால், இப்போது இந்த டிஜிட்டல் உலக பத்திரிக்கையை

எப்படி வடிவமைப்பது ?என்பதில்தான் இப்போது குழப்பத்தில் இருக்கிறார்கள்.ஆரம்பத்தில் இருந்து இணையதள பத்திரிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று எழுதி வந்தது மக்கள் அதிகாரம் பத்திரிகை என்பது அவர்களுக்கு நன்றாக தெரியும் . மேலும்,இந்த நிலையில் தவறுகளை நியாயப்படுத்தக் கூடிய பத்திரிகைகளுக்கு முக்கியத்துவம் தரக்கூடாது .பத்திரிகையில் பிரிண்ட் அடித்து கணக்கு காட்டுவது போல், இங்கே காட்ட முடியாது. மக்களுக்கு எது உண்மை? என்று தேடுவது தான் இணையதள பத்திரிக்கையின் நோக்கமாக



இருக்கும்ஃ இருக்கிறது .அப்படி இருக்கும்போது, அதற்கு தகுதியானது எத்தனை பத்திரிகைகள்? என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

இப்போது கூட அதிகாரிகள் சொன்னார்கள். நல வாரியத்தில் இன்னும் சிறிய பத்திரிகைகளின் பிரதிநிதிகள் சேர்க்கப் போகிறார்கள். என்பது காதுக்கு வந்த செய்தி .இதை அமைச்சர் யாரை சொல்கிறாரோ அவரை போடுவார்கள் என்று தெரிகிறது .இங்கு தான் அரசியல் உள்ளே வரும்போது, தகுதி என்பது அடிபட்டு போகிறது .தகுதியானவர்களை உள்ளே கொண்டு வந்தால், தான் தரமும் தகுதியும், பத்திரிக்கை துறையில் கொண்டு வர முடியும். அது முக்கியமானது.

அடுத்தது, பிரிண்ட் பத்திரிக்கையில் சிபாரிசுகள் போல, டிஜிட்டல் பத்திரிக்கையில் சிபாரிசு என்பது முடியாத காரியம் .ஏனென்றால், நீங்கள் கட்சி பத்திரிகையை நடத்திக் கொண்டு, எந்த எந்த கட்சி!ஆட்சி , அதிகாரத்திற்கு வருகிறதோ ?அந்த கட்சியின் செய்தியை போட்டு ,நீங்கள் கட்சி பத்திரிக்கையும் ,இதற்குள் கொண்டு வந்தால், இங்கே அதை மக்களுக்கான பத்திரிக்கையாக ஏற்றுக் கொள்ள முடியாது.

மேலும்,முழுக்க, முழுக்க இது ஒரு நடுநிலைத் தன்மை வகிக்கக்கூடிய உண்மை செய்திகளை வெளியிடக் கூடிய தகுதியான பத்திரிகைகள் மட்டும்தான் இதில் இடம் பெற்றால் தான் ,இதில் தவறுகள் வருவதற்கு வாய்ப்பில்லை. இல்லை என்றால், எதிர்காலத்தில் ஏகப்பட்ட குளறுபடிகள் வந்துவிடும்.இங்கே பழைய பஞ்சாங்கத்தை போல் ,அச்சடிப்பது சட்டம் ஆக்கி, பத்திரிக்கை துறையை கார்ப்பரேட்டுக்கு செய்தித்துறை சொந்தமாக்கி வைத்திருப்பது போல, இதிலும், அதுவே தான் கொண்டு வந்து விடும். இதை மாற்ற வேண்டுமென்றால், அரசியலுக்குள், பத்திரிகைகள் இருக்கக் கூடாது ,இந்த பத்திரிகைகள் மக்களுக்காக இருக்க வேண்டும் . இப்படி வடிவமைத்து அதிகாரிகள் செயல்பட வேண்டும் . மத்திய அரசும் இணையதள பத்திரிக்கையை

கொண்டு வந்துள்ளது .ஆனால், அதில் நிறைய குளறுபடிகள் உள்ளது. மீண்டும் அதற்குள் அரசியல் இருக்கிறது. எனவே, அரசியலுக்குள் பத்திரிகை என்றால், குளறுபடிகள் வரத்தான் செய்யும்.

மேலும் , உண்மைக்கு முக்கியத்துவமான பத்திரிகைகள், நாட்டுக்கும் ,நாட்டு மக்களுக்கும் ,உண்மை தன்மையை கொண்டு சேர்க்கக் கூடிய பத்திரிகைகளாக இவர்கள் இருக்க வேண்டும். இதில் தேசத்தின் பாதுகாப்பு ,மக்களின் பாதுகாப்பு ,உண்மையான செய்திகள், தரமான செய்திகள், அரசின் செய்திகள், இது அத்தனைக்கும் மார்க் போட்டு, மக்கள் மனதில் இதற்கான இடம் எங்கே நிற்கிறது? இதற்கு முக்கியத்துவம் கொடுத்தால், இந்த பத்திரிகைகள் நிச்சயம் மக்களுக்கும் பயன்படும். இந்த தேசத்திற்கும் பயன்படும். அரசாங்கத்திற்கும் பயன்படும்.

இதிலே டி.டி. அண்ணாதுரை அவர்களிடம் பேசும்போது, இறுதியாக அவர் ஒரு வார்த்தை சொன்னார். பயன்கள் என்று குறிப்பிட்டார். இதுதான் சார், லட்சத்தில் ஒன்று ,என்று அவர் பேசும் போது குறிப்பிட்டேன். அதாவது ,இந்த செய்திகளுக்கான பயன்கள் மிக, மிக ,முக்கியத்துவம் ஆனது. இதை முதன்மைப்படுத்தி, பத்திரிகைகளை ஆய்வுக்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.இதில் அவ்வளவு எளிதில் கணக்கு காட்டக் கூடிய பத்திரிகைகள் உள்ளே வர முடியாது .ஒருவன் படித்தாலும்,

படிக்காவிட்டாலும் ,அந்த பத்திரிகையை நீட்டி விட்டு, போய்விடுவார்கள் .இங்கே அதுயெல்லாம் நடக்காது.அது மட்டுமல்ல, கார்ப்பரேட் கம்பெனி பத்திரிகைகள் கூட ,அச்சடிப்பதை கணக்கு காட்டி ,சலுகை ,விளம்பரங்கள் வாங்குவது போல், இங்கே வாங்க முடியாது. அங்கே சினிமா செய்தியை போடுவார்கள், விளையாட்டு ,வியாபார செய்திகளை போடுவார்கள் ,அரசியல் கட்சி செய்திகளை போட்டு ,பக்கங்களை நிரப்பி காட்டக்கூடிய வேலையெல்லாம் இங்கே நடக்காது. அதனால் ,இது எல்லாம் அரசியல் சுயநலமாக

இருந்த காலத்தில் கார்ப்பரேட் பத்திரிகைகள் அவர்களோடு சேர்ந்து மக்கள் பணத்தை கொள்ளையடித்தார்கள். இப்படிப்பட்ட கொள்ளை இனி இருக்கக் கூடாது. பத்திரிகை துறையும், செய்தித் துறையும், இணையதள பத்திரிகைகளை மக்கள் நலனுக்காக மாற்ற வேண்டும் .மக்களுக்கான பயன்கள் என்ன? என்பதை இந்த டிஜிட்டல் உலக பத்திரிக்கை கொடுக்க தயாராக இருக்க வேண்டும் .

அதுதான் செய்தி துறையின் வெற்றியாக இருக்குமே தவிர ,மீதி எதுவும் இந்த செய்திகள் வெற்றி பெற வாய்ப்பு இல்லை என்பதை இந்த கட்டுரையை முடிக்கிறேன்.(இது தொடரும்)

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள்! ஊழல் செய்து வாங்கிய சொத்துக்கள்! பறிமுதல் செய்ய கோர்ட்டு உத்தரவு – இதுவே அரசியலில் ஊழல் செய்த சொத்துக்களை பறிமுதல் செய்ய நீதிமன்றம் கால தாமதம் செய்வது ஏன்?

மதுரை உயர்நீதிமன்ற கிளை சமீபத்தில் சார் பதிவாளர் தொடர்ந்து வழக்கில் தீர்ப்பு வழங்கி உள்ளது. அந்தத் தீர்ப்பு உண்மையிலேயே வரவேற்க வேண்டிய ஒன்றுதான். அதைத் தவறு என்று சொல்வதற்கில்லை.அதாவது, அரசு ஊழியர்கள் ஊழல் செய்து சொத்து சம்பாதித்தால் ,அதை உடனே பறிமுதல் செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளது. அதேபோல் ,அரசியலில் பதவி அதிகாரத்தில் ஊழல் செய்த சொத்துக்களை ஏன் நீதிமன்றம் அவர்களுக்கு வாய்தா போட்டு ,பல ஆண்டுகளாக காலதாமதம் செய்கிறது? அது மட்டுமல்ல, அவர்களுடைய ஆரம்ப கால சொத்து நிலை என்ன? ஐந்தாண்டுகளில் எப்படி இவ்வளவு கோடிகள் வந்தது? அதை ஏன் கணக்கெடுப்பதில்லை

? சட்டம் அரசு ஊழியர்களுக்கு ஒன்று! அரசியலில் பதவி அதிகாரத்தில் ,இருப்பவர்களுக்கு ஒன்றா? மேலும்,ஒரு சாதாரண கிராம பஞ்சாயத்து தலைவராக வருபவர்கள், ஒன்றுமே இல்லாமல் வரும்போது இருப்பவர்கள் ,பிறகு கோடிக்கணக்கில் சொத்துக்கள் எப்படி வருகிறது? அதேபோல் கவுன்சிலர்கள், சேர்மேன்கள், எம்எல்ஏக்கள், மந்திரிகள் ,எம்பிக்கள் இவர்களுடைய சொத்து விபரத்தை ஏன்? ஆண்டுதோறும்,லஞ்ச ஒழிப்பு துறையும், மத்திய குற்ற புலனாய்வுத் துறையும் ,கண்காணிப்பதில்லை? விசாரிப்பதில்லை? மேலும்,சட்டம் இவர்களுக்கு மட்டும் ஒன்று அரசு ஊழியர்களுக்கு ஒன்றா? மதுரை உயர்நீதிமன்ற கிளை தங்கவேல் சார் பதிவாளருக்கு வழங்கிய தீர்ப்பு போல், மக்களின் பிரதிநிதியாக வருபவர்களுக்கு ஏன் அந்த தீர்ப்பை வழங்கவில்லை? ஏன் புலனாய்வு அமைப்புகள் அவர்களுடைய சொத்துக்கணக்கை விசாரிப்பதில்லை? ஏன் நடவடிக்கை எடுப்பதில்லை?

அவர்களுக்கு மட்டும் ஏன் கோடிகளில் சொத்துக்கள் பெருக்கெடுக்கிறது? அவர்களுடைய தொழில் என்ன? வருமானம் என்ன?இதுதான் சமூக ஆர்வலர்கள் கேள்வி? இதே கேள்வி தான் சமூக நலன் பத்திரிகைகளின் கேள்வி? இனியாவது நீதிமன்றம் இதற்கு ஒரு உத்தரவை பிறப்பிக்குமா?

ஒவ்வொரு ஆண்டும் காந்தி ஜெயந்தி அன்று, கிராம சபை கூட்டங்கள் நாடு முழுவதும் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டிலும் ,இந்த காந்தி ஜெயந்தி அன்று கிராம சபை கூட்டம் நடத்தப்படுகிறது.
சில இடங்களில் ,நடத்தாமலே கணக்கு காட்டப்படுகிறது. இது ஒரு புறம் இருக்கட்டும், காந்தியைப் போன்று நேர்மையான முறையில் ,இந்த கிராம சபை கூட்டம் நடத்துவதற்காக இந்த நாளை தேர்வு செய்யப்பட்டுள்ளதா? அப்படி இருந்தால், நேர்மையான கணக்கு வழக்குகள்

ஆண்டுதோறும் காந்தியின் நினைவாக கிராம சபைக் கூட்டங்கள்! நாடு முழுவதும் நடத்தப்படுகிறது. ஆனால், கிராமத்தின் கணக்கு வழக்குகள்! இன்னும் கிராம மக்களின் பார்வைக்கு ஏன் சென்றடையவில்லை ? - ஆசிரியர்.

பஞ்சாயத்து நிர்வாகத்தில் இன்னும் ஏன் மக்களுக்கு தெரியாமல் இருக்கிறது? மேலும்,மக்கள் அதிகாரம் பத்திரிக்கை தொடர்ந்து ஐந்தாண்டுகளுக்கு மேலாக போராடி, கிராம பஞ்சாயத்து நிர்வாகத்தில், பல்வேறு மாற்றங்களை, கொண்டு வந்துள்ளது. இருப்பினும் அந்த மாற்றம் இன்னும் முழுமை அடையாமலே இருக்கிறது. கடந்த திமுக ஆட்சியில் எவ்வளவோ கிராம நிர்வாக பஞ்சாயத்து சம்பந்தமாக பல்வேறு செய்திகள் வெளியிட்டிருந்தும்,இது பற்றி நடவடிக்கை

எடுக்கவில்லை. திமுக ஊழல் ஆட்சி! என்பதை ஒத்துக் கொள்ள வேண்டிய ஆட்சி. அதனால், அதற்கு எத்தனை செய்திகள் எழுதினாலும் ,அதை காதில் வாங்க மாட்டார்கள். மேலும்,

தற்போது தமிழக வெற்றி கழகத்தின் ஆட்சியில், கிராம நிர்வாகத்தில் என்ன வரவு, செலவு ?என்னென்ன திட்டங்கள்? தினந்தோறும் நடைபெறுகின்ற வேலைகள் அதற்கான செலவுகள் வரவுகள் என்ன? இது பற்றிய விரிவான கணக்கு ,வழக்குகளை ஆன்லைன் மூலம் பஞ்சாயத்து கிராம செயலாளர்கள் பொது மக்களின் பார்வைக்கு

இணையதளத்தில் ஏற்ற வேண்டும். இவர்கள் எத்தனை நாளைக்கு எங்களுக்கு கம்ப்யூட்டர் தெரியாது என்று ஏமாற்றிக் கொண்டிருப்பார்கள்? மேலும், இந்த நிர்வாகத்தின் கணக்கு வழக்குகள் கிராம மக்களுக்கு எப்போது இவை அனைத்தும் வெளியே வருகிறதோ ,அப்போதுதான் கிராம பஞ்சாயத்தின் நிர்வாகம் மக்களிடம் முழுமை பெறுகிறது. ஏனென்றால், இன்னும் பல கிராமத்தில் கட்டப்பஞ்சாயத்து கூட்டம், அரசியல் கட்சிகளை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு சில துறைகளில், அதிகாரிகள் துணை போய்க் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக கூட்டுறவுத் துறை! இதை தனியாக கவனிக்க வேண்டிய ஒரு துறை! இருப்பினும், இந்தத் துறையில் சமீபத்தில் தான் என்னுடைய

காதுக்கு வந்த ஒரு செய்தி! திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் வட்டத்தை சேர்ந்த ஒரு கிராமத்திற்கு கூட்டுறவு துறை மூலம், அந்த கிராமத்திற்கு ஒரு டிராக்டர் பொதுவாக கொடுக்கப் பட்டுள்ளதாம். மேலும்,இன்று வரை கிராம மக்களுக்கு அது எப்போது கொடுத்தார்கள்? என்பது தெரியாது. யாருக்குமே தெரியாமல் ,அந்த டிராக்டரை ரகசியமாக மறைத்து வைத்திருக்கிறார்கள்.

இப்படியெல்லாம், கிராமங்களில் நடக்கிறது என்றால்! இன்னும் எத்தனை ஆண்டுகள் ?இந்த கிராம பஞ்சாயத்தின் நிர்வாகங்கள் கிராம மக்களுக்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் மறைத்து வைக்கப் போகிறது ? தமிழக அரசு ! இது பற்றி முதல்வர் விஜய் தனிக் கவனம் செலுத்தி ,கிராம பஞ்சாயத்து நிர்வாகத்தை மக்களின் வெளிப்படை தன்மைக்கு கொண்டு வருவாரா? என்பது தான் கிராம மக்களின் முக்கிய கோரிக்கை.

.
பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் உள்ள அரசை ,அன்னிய சக்திகள் எப்படியாவது கவிழ்த்து விட வேண்டும் என்பதுதான், அவர்களுடைய முக்கிய நோக்கம்!அதற்கு ராகுல் காந்தி, காக்ரோச், எதிர்க்கட்சிகள் கூட்டு சேர்ந்து, இந்தியாவுக்கு எதிரான சதி திட்டத்தில் இவர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பது தான் உளவுத்துறை ரிப்போர்ட் . இது ஏன்? பிரதமர் தேர்வு செய்து இருக்கிறார் .அது 13 கோடி வாக்காளர்கள், தேர்தல் ஆணையரால் நீக்கப்பட்டு விட்டார்கள். அதனால், அவரை உடனடியாக நீக்கிவிட வேண்டும். என்னமோ இந்திய மக்கள் இவரால்தான் பிழைத்துக் கொண்டிருப்பது போல, இவர்கள் தேர்தல் ஆணையரை நீக்கிவிடு, என்று சமூக போராளி போல, போலி அரசியல் செய்து கொண்டிருக்கும் ராகுல் காந்தி, காக்ரோச் என்ற

இந்தியாவின் பொருளாதாரத்தை சீரகுலைக்கும் மறைமுக சக்திகள் உடன் ராகுல் காந்தி! மற்றும் காக்ரோச் கூட்டம்! - இந்திய மக்கள் விழித்துக் கொள்வார்களா?

நரேந்திர மோடியை தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதை திட்டவட்டமாக ராகுல் காந்தி தெரிந்து கொண்டார்.அதனால் குறுக்கு வழியை

மாணவர் கூட்டம் 40 - 50 வயதில் என்ன மாணவர் அமைப்பு?மேலும்,,இவர்களுக்கெல்லாம் பண உதவி ராகுல் காந்தி மூலம் அந்நிய சக்திகள் மறைமுகமாக கொடுப்பதாக ரகசிய தகவல்.

இல்லையென்றால் இவர்களால் எப்படி போராட முடியும்? இவர்களுடைய போராட்டத்தின் ஆதாரம் என்ன? எதற்காக போராடுகிறார்கள்? யாருக்காக போராடுகிறார்கள்? அந்தப் போராட்டத்தை உச்சநீதிமன்றத்தில் வழக்காக கொண்டு போனால், நீதிபதிகள் ஆதாரம் கேட்கிறார்கள். அங்கே ஆதாரத்தை இவர்கள் கொடுக்க வேண்டியது தானே ஏன்? கொடுக்க மறுக்கிறார்கள்? பல நாடுகளில் இது போன்ற போராட்டங்கள் மூலம் ஆட்சியை கவிழ்த்து ,மக்களை ஏமாற்றி ,அவதூறுகளை பரப்பி ,இந்தியாவுக்கு எதிரான சதி வேலைகளில் ஈடுபட்டிருக்கும் கூட்டம் இந்த காங்கிரஸ் கட்சி! மற்றும் காக்ரோச் கூட்டம்.

இதில் இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் மம்தா பானர்ஜி ,ஸ்டாலின், கம்யூனிஸ்டுகள், திருமாவளவன், இவர்களெல்லாம் , அரசியல் தெரியாத மக்களுக்கு அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் மக்கள் அதிகாரம் தொடர்ந்து மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வு வேண்டும் .விழிப்புணர்வு வேண்டும் என்று எமது பத்திரிக்கையில் எழுதிக் கொண்டிருக்கிறோம். இன்று ஒரு பொருளைப் பற்றி தெரியவில்லை என்றால் ,அந்த கடைக்காரன் வாங்குபவர்களை ஏமாற்றுகிறான். அதே நிலைமைதான் இப்போது ,நாட்டில் அரசியலைப்

பற்றி தெரிந்து கொள்ளவில்லை என்றால், அரசியல் கட்சிகள் ஒவ்வொரு வாக்காளனையும், பேசியே கவிழ்த்து ,ஏமாற்றுவதற்கு தயாராக இருக்கிறார்கள். அதனால், மக்கள் 50 ஆண்டுகாலம் ஏமாந்தது போதும், 1965 க்கு முன் உள்ள அரசியல் என்ன? 1965 க்கு பின் உள்ள அரசியல் என்ன? என்பதை பற்றி ஒவ்வொரு தமிழக மக்களும் படித்து தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது கூட கமி'ன் வாங்கினார்கள். காண்ட்ராக்டர்கள் இடம் எவ்வளவு வாங்கினார்கள்? 5% வாங்கினார்கள். தவறு இல்லை .அது அவர்களுடைய செலவுக்கு, மற்றபடி அவர்கள் பின்னால் வர கட்சி செலவுக்கு போகட்டும் .பரவாயில்லை.

ஆனால் ,கண்ணுக்குத் தெரியாமல் பல லட்சம் கோடிகளை கனிம வளம் கொள்ளை, வேலை செய்யாமலே காண்ட்ராக்ட் வேலை செய்தார் போல் கொள்ளை,இப்படி மக்களுடைய வரி பணத்தை சுரண்டி ஊழல் செய்து, இன்று ஆயிரம் கோடி ,2000 கோடி ,5000 கோடி ,ஒரு லட்சம் கோடி என்று, கோடிகளில் கொள்ளை அடித்திருக்கிறார்கள்.

அதற்கு படித்த மக்களும் ,அரசியல் தெரிந்தவர்களும் தான், தமிழ்நாட்டில் இந்த அரசியல் மாற்றத்தை விரும்பினார்கள். இன்னும் கூட ,இந்த விழிப்புணர்வு இல்லாத மக்கள், கிராமங்களில் பணத்துக்கு வாக்களித்துக் கொண்டிருக்கிறார்கள்.ஆனால், அவர்கள் குடும்பத்து பிள்ளைகள் படித்து இருப்பார்கள் அல்லவா? அவர்களாவது அரசியல் என்றால் என்ன என்று தெரிந்து,விழிப்புணர்வு அடைந்து, இனிமேலாவது பணம் வாங்காமல், ஒரு நேர்மையான ஆட்சி நிர்வாகத்தை கொண்டு வர வேண்டும் என்று வாக்களிக்க வேண்டும்.

இல்லையென்றால், ராகுல் காந்தி போன்ற சதிகாரர்கள் ,இந்தியாவை துண்டாட நினைப்பார்கள். ஒவ்வொரு நாடும் ,இன்று பல்வேறு இயற்கையின் பாதிப்புக்களால், சீரழிந்து எத்தனையோ பிரச்சனைகளோடு போராடிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் ,பிரதமர் நரேந்திர மோடி !தமிழ்நாட்டில் ஆட்சியை இல்லை என்றாலும், இந்திய மக்கள் அவருடைய செயல்பாடு ,நேர்மையான அரசியல், என்று உலக நாடுகள் பாராட்டுகிறது. மற்ற மாநிலங்கள் அரசியல் தெரிந்து பிஜேபிக்கு வாக்களிக்கிறார்கள்.

ஆனால், தமிழ்நாட்டில் அதற்கு சரியான நிர்வாகிகள் இல்லை என்பது தான் இங்கே வருத்தமான ஒன்று. மேலும், ராகுல் காந்தி முஸ்லிம்களை வைத்துக் கொண்டு இந்தியாவுக்கு எதிராக வேலை பார்த்தால், இந்திய மக்கள் அனைவரும் ஏமாளிகள் அல்ல . அதனால், நிச்சயம் இனி ராகுல் எதிர்க்கட்சியாககூட வர முடியாது என்பது உறுதி.

மனித வாழ்க்கை காலத்தின் கையில்! ஆனால்; மனிதன் நினைப்பது அதிகாரத்தின் கையில்! இதில் எது வெற்றி பெறுகிறது? அதுதான் ; வாழ்க்கையின் வெற்றி! தோல்வியா? எவரும் உன்னை வென்றதில்லை! உன்னை வெல்பவர்கள் யார்?

எல்லோரும் நீ போட்ட பிச்சை தான் வாழ்க்கை! அதன் ஏற்றத்தாழ்வு புரியாமல்; தெரியாமல் வாழ்ந்து இறந்த மனிதர்கள் பல கோடி! கொடுப்பதும் நீ ! எடுப்பதும் நீ! காலமே! உலக வாழ்க்கையை நீ தந்த பரிசு!

ஹே !மனிதா !வாழ்க்கை உனக்கு எளிமையாக இருக்கும் போது ;!அது எவ்வளவு சந்தோஷமானது? அதுவே; ஆடம்பரமாகும் போது; அது எவ்வளவு வேதனைகளை அனுபவிக்கிறது? அந்த வேதனைகள் உனக்குள்ளே முள்ளாக குத்தும்போது ;அதன் வலிகள் தாங்கும் சுகமான சுமைகளா?இல்லை

உன் !ஆடம்பர வாழ்க்கையின் சுகமான வலிகளா? காலன் உன்னை பார்த்து சிரிக்கிறான் .எதற்கு ?இந்த வாழ்க்கை? இயற்கையோடு வாழும்போது ;உன் மனதுக்கு எத்தனை சந்தோஷம் ?எத்தனை பிறவிகள் எடுத்தாலும்; அது கிடைக்கும்?உன் அம்மாவின் அன்பும்; அப்பாவின் உறவும்; உடன் பிறந்த சகோதரர்களோடு பாசத்தின் வாழ்வும்; பகையும்; வெறுப்பும். இனி காலம் அதை உனக்கு கொடுக்குமா? நாளெல்லாம் விவசாயத்தின் பெருமை; சந்தோஷத்தில் வாழ்ந்த நீ!

காலமே!

உனக்கு ஒரு

கவிதை எழுதினேன்!

அந்த கவிதைக்கு! உன் காதல்!

நீ கொடுக்கும் பரிசு! புதிய

வாழ்க்கையா .....?

ஏட்டினில் எழுதி வைத்து! எத்தனை செய்திகள் சொன்னாலும்; அந்தக் காலத்தின் சுவை கண்முன்னே வரும்போது; எதற்கு இந்த வேஷம்? காலமே வாழ்க்கை என்பதை புரிந்து கொண்டால்! காலமே சந்தோஷமும்; துக்கத்தையும்; கொடுக்கும்போது; வாழ்க்கை! உன்னை புரிந்து கொள்ள சந்தர்ப்பம் கொடுக்கிறதா? இல்லை

இல்லை!என்னை காலம் அதன் பெருமைகளை கவிதை எழுத சொல்லுகிறதா? நான் என்ன காலத்தின் கருவியா? காலமே உன் பெருமையை உணர்ந்து விட்டேன். நான் எழுதும் கவிதை! உனக்கு! பணம் அதுக்கு ஈடு ஆகுமா?

சத்யம்; தர்மம் சாகாமல்! உலகை வழி நடத்தும் உன் ஆட்சிக்கு! மனிதனின் அதிகாரம்! உன் கையில் அல்லவா? பிறப்புக்கும்; இறப்புக்கும்! வாழ்க்கை பயணத்தின் உன் கால சட்டத்தில்! வெற்றி பெற்றவர் எவர்? காலமே!உனக்கு ஒரு கவிதை இது! என்னை வாழ வைப்பாயா ? ஆசிரியர் .



அரசியலுக்குள் கார்ப்பரேட் பத்திரிகைகள் இருப்பதால் ! அதனுடைய ஆதிக்கம் சமூகநலன் பத்திரிகைகளை வளரவிடாமல், தடுப்பது 50 ஆண்டுகால பத்திரிக்கை துறையின் வீழ்ச்சி! அதற்கு முற்றுப்புள்ளி வைக்குமா? - தேசிய மனித உரிமைகள் ஆணையம்.

நாட்டில் எத்தனையோ பிரச்சனைகளில் மிக முக்கிய பிரச்சனை பத்திரிக்கை துறையின் பிரச்சனை.

இது ஒரு கடல் போல இருக்கும் துறை! இந்த கடலில் யார் முத்து எடுக்க முடியும்? என்பதுதான் மிகப்பெரிய சவால்களாக, போட்டி துறையாக உள்ளது. இதில் கார்ப்பரேட் பத்திரிக்கைகளுக்குள் போட்டி, சமூக நலன் பத்திரிகைகளுக்குள் போட்டி, இந்த போட்டிக்குள் ஜெயிப்பது என்பது இதற்குள் இருக்கின்ற அரசியல்! ஆளும் கட்சியின் அரசியல் ஆதிக்கம் ,மத்திய மாநில அரசின் செய்தி துறையில் ! கொடுக்கப்படும் சலுகை, விளம்பரங்கள் மற்றும் அங்கீகாரம்,மேலும், மக்களின் வரிப்பணத்தில் , கொடுக்கப்பட்டாலும், அது கார்ப்பரேட் டுக்கு மட்டுமே சொந்தம் என்று இன்றுவரை செய்தித் துறை இருந்து வருகிறது. ஏனென்றால்,

இவர்கள் மூலம் அவர்களுக்கு மறைமுக (கமிஷன்) லாபம். அதுதான் செய்தித் துறையின் மிகப்பெரிய ஊழலாக இன்றுவரை தொடர்கிறது. அதனால் செய்தித் துறை !வருமானத்தை கொடுப்பவர்களுக்கு விசுவாசிகளாக இருக்கிறார்கள். கமி'ன் கொடுக்க முடியாத பத்திரிகைகள், தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது.மேலும்,இதில் தகுதியான பத்திரிகைகள் கூட ,அதன் முடிவு தோல்வியில் முடிவதும், வெற்றியில் முடிவதும் உண்டு. அந்த அளவுக்கு செய்தித் துறையில் ஏஜென்ட்கள் மூலம் மறைமுக ஊழல் ஆதிக்கம் செலுத்துகிறது. அந்த ஊழலை ஒழிக்க வேண்டும் என்றால், முதலில் இந்த சலுகை ,விளம்பரங்கள் ஏஜென்ட்கள் மூலம் கொடுப்பதை நிறுத்தப்பட வேண்டும். மேலும்,இந்த ஏஜெண்ட்கள் தான் அதிகாரிகளுக்கும், ஆட்சியாளர்களுக்கும் கொடுக்கும் கமிஷன் ஏஜெண்டுகள் . இவர்கள் தான் இந்த பத்திரிகைகளுக்கு மிகப் பெரிய எதிரி. ஏனென்றால், இந்த பத்திரிகைகளால் அந்த கமி'ன் கொடுக்க முடியாது. மேலும், சமூக நலன் பத்திரிகைகள் சில மக்களுக்காக பத்திரிகை நடத்துகிறார்கள். கார்ப்பரேட்டுகள் தினசரி போர்வையில்! அரசியல் கட்சிக்கும் ,ஆட்சியாளர்களுக்கும், வியாபாரத்திற்கும் ,பத்திரிக்கை நடத்தி

விட்டு, சர்குலேஷன் மூலம் பத்திரிக்கை துறையை ஏமாற்றி ,சலுகை, விளம்பரங்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இது தான் 50 ஆண்டுகால செய்தித் துறையின் மிகப்பெரிய ரகசியமான ஊழல்! இந்த ஊழலை பற்றி ஒரு பத்திரிகைகள் கூட வெளியில் செய்திகளை வெளியிடாது. ஏனென்றால் ,சிறு பத்திரிக்கை நடத்துபவர்களுக்கு இது பற்றி, போதுமான அறிவு கிடையாது .

அதை பொதுவெளியில் எடுத்து ,மக்களிடம் சொல்லவும் ,அதற்கான தகுதியும் இல்லை. அதுவே போராட்டத்தின் மிகப்பெரிய தோல்வி. ஆனால் ,சலுகை விளம்பரங்கள் கொடுத்தால் ,முதலில் வந்து நிற்பவர்கள் இவர்கள்தான்.

மேலும்,இதை மக்கள் அதிகாரம் தொடர்ந்து பத்து ஆண்டுகளாக இந்த கார்ப்பரேட் ஊடக அரசியல் ஆதிக்கத்தின் ஊழல்களை எதிர்த்து போராடி வருகிறது. இங்கே எத்தனையோ ஆட்சிகள் மாறினாலும், ஆனால், இதற்கான சட்டங்கள் மாற்றப்படாமல் தொடர்கிறது. மேலும்,காலத்துக்கு ஏற்ப பத்திரிக்கை துறையில் மாற்றங்கள் கொண்டு வருவது அவசியமானது. அதை மக்கள் அதிகாரம் தொடர்ந்து ,இன்றைய காலத்திற்கு ஏற்றவாறு, இணையதள பத்திரிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது.

இருப்பினும், தமிழக வெற்றி கழகத்தின் ஆட்சியிலும், கார்ப்பரேட் ஊடக அரசியல் ஆதிக்கத்தை தான் அமைச்சர் ராஜ் மோகனால் செய்ய முடிகிறது . இவரால், இந்த துறையில் மாற்றங்கள் கொண்டுவர முடியாது.

இவர் எப்போது கார்ப்பரேட் பத்திரிகைகளில் பணியாற்றக் கூடியவர்களை மட்டுமே நல வாரியத்தில் பொறுப்புக்களை போட்டாரோ ,அப்போதே பத்திரிக்கை துறை ! பழைய பஞ்சாங்கமாகத்தான் இருக்கப் போகிறது. என்று முடிவு செய்தேன். மேலும்,இது பற்றி பல அதிகாரிகளின் கருத்துக்களை கூட அவர் ஏற்கிறாரா? என்பது சந்தேகம்தான்.ஏனென்றால் இது ரகசிய ஊழல் துறை ! இப்படிப்பட்ட துறைகள் பல இருக்கிறது. அதில், செய்தித்துறை மிக முக்கியமானது

.இதில் மக்களின் வரி பணம் தங்களுக்கு மட்டுமே என்று சொந்தம் கொண்டாடும் கார்ப்பரேட் அரசியலை எதிர்த்து, இந்த சிறு பத்திரிகைகளால் கேள்வி கூட கேட்க தகுதி இல்லாமல் இருக்கிறது. இருப்பினும் தகுதியான பத்திரிகைகளுக்கு அரசின் சலுகை, விளம்பரங்கள் கிடைக்க வேண்டும் என்பதுதான் சமூக நலன் பத்திரிகைகளின் முக்கிய கோரிக்கை. மேலும், எத்தனையோ

செய்தித்துறை பி. ஆர். ஓ க்கள் கார்ப்பரேட் பத்திரிக்கை ,தொலைக்காட்சியின் ஏஜெண்டுகளாக கூட செயல்படுகிறார்கள். இவர்கள் செய்திக்கு முக்கியத்துவம் தராமல், சர்குலேஷனுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள். சர்குலே'ன் மட்டுமே பத்திரிகை என்றால், அந்த பத்திரிகை செய்திகள் அரசியலுக்குள் வந்து விடுகிறது. அதாவது பத்திரிக்கையின் சுதந்திரம் என்பது செய்தித் துறையின் சர்குலே'ன் சுதந்திரம். இந்த உண்மை தகுதியான ஜர்னலிஸ்ட் களுக்கு மட்டுமே தெரிந்த உண்மை.

இது தவிர, செய்தி துறையின் ஊழல்!தினசரி முதல் எல்லா பத்திரிக்கையும் பத்தாயிரம் பிரதிகள் அச்சு அடிக்க வேண்டும். விற்பனை எவ்வளவு என்று அந்தந்த பத்திரிகை காட்டுகின்ற கணக்கு உண்மையானதா? அது ஆடிட்டர்கள் கொடுக்கின்ற கணக்கு. தற்போது பத்திரிக்கையே வாங்கி படிக்கும் எண்ணமே மக்களிடம் குறைந்து விட்டது. பிறகு எப்படி சர்குலே'ன் சட்டத்தை வைத்து, இந்த சலுகை, விளம்பரங்களை செய்தித்துறை முடிவு செய்கிறது?

இப்படி எல்லாம் பத்திரிக்கை துறையை பாழ்படுத்தும், செய்தித் துறை! இதன் பின் விளைவு நாட்டில் ! ஊழல் வளர்ந்துள்ளது. அதற்கு வாழ்க பலமாக கார்ப்பரேட் ஊடகங்கள் பெரும்பான்மை, நாட்டில் மறைமுகமாக ஊழலை வளர்த்து ,பல ஆயிரம் கோடி மக்களின் வரிப்பணத்தை வீணடித்து, மத்திய மாநில அரசின் செய்தித் துறை சாதனை. மேலும்,பத்திரிக்கை துறையில் !சிறிய ,பெரிய என்ற பேதம் இல்லாமல், பத்திரிகைகளுக்கு கொடுக்க வேண்டிய சம வாய்ப்புகள் மறுக்கப்படும் உரிமைகள் தொடர்ந்து ,இந்த 50 ஆண்டுகால அரசியல் வரலாறு ,மத்திய, மாநில அரசின் செய்தித் துறையின் சாதனை . அதாவது மக்களின் வரி பணம் சாமானிய மக்களின் பத்திரிகைகளுக்கு கொடுக்கக் கூடாது என்பதுதான் இவர்களின் சட்டம். மேலும்,இதற்குள் இருக்கும் கார்ப்பரேட் அரசியல் மற்றும் மத்திய மாநில அரசின் கொள்கை முடிவு அரசியல், மற்றும் நலவாரியத்தில் கார்ப்பரேட் பத்திரிகைகளின் நிர்வாகிகள் அரசியல்! தவிர,அரசின் விளம்பரங்கள்! ஏஜென்ட்கள் மூலம் ஏன் கொடுக்க வேண்டும் ?அதனால், அரசுக்கு என்ன நன்மை? இது ரகசிய ஊழலுக்கு, இதில் ஏற்படுத்தி இருக்கும் மறைமுக வழி எல்லாவற்றிக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.மேலும்,இது பற்றி எத்தனையோ முறை மக்கள் அதிகாரம் பத்திரிகை சார்பில் மத்திய மாநில அரசின் செய்தித் துறையில் (சுவுஐ) ஐ மூலம் கேட்ட கேள்விகளுக்கு சரியான பதில் கொடுக்க ,துப்பில்லாத இவர்கள், பதில் அளிக்க இயலாது. பதிலளிக்க இயலாது. இதுதான் பதிலாக இருந்தது. இது என்ன ராணுவ ரகசியமா?

மேலும், பத்திரிகை துறைக்குள் அரசியல் ஆதிக்கம் எவ்வாறு தொடர்கிறது ?என்பது இச் செய்தியின் முக்கியத்துவம். அது மட்டுமல்ல,மத்தியில் ஆளும் காங்கிரஸ் ஆட்சி காலம் முதல் தற்போது ஆளும் பிஜேபி ஆட்சி வரை அங்கும் இதே நிலைமைதான் ,செய்தித் துறையில் கார்ப்பரேட்டுக்களின் அரசியல் ஆதிக்கம் நுழைந்து ,இந்த சிறு பத்திரிகைகளுக்கு மிகப் பெரிய எதிர்ப்புகளை மறைமுகமாக அரங்கேற்றம் அரசியல்.மேலும்,இது பற்றி தெரியாதவர்கள் எல்லாம் இன்று பத்திரிகை என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல,மக்களுக்கு வெளிச்சத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு துறையில்! எவ்வளவு பெரிய இருட்டு ஒளிந்திருக்கிறது? என்பதுதான் ஒரு சாமானிய பத்திரிக்கை மற்றும் பத்திரிகையாளனின் உண்மை மக்களின் பார்வைக்கு மட்டுமல்ல, இது தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பார்வைக்கும், இந்த உண்மைகள். மேலும்,இதற்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் முறையாக வழக்கு பதிவு செய்து, முறையான விசாரணை அறிக்கை கேட்டு, மத்திய மாநில அரசின் செய்தித்துறையை விசாரணை செய்தால், உண்மைகள் வெளிவரும் .பத்திரிக்கை துறையில் நீதி கிடைக்கும்.

மேலும்,இதையும் மக்கள் அதிகாரம் பத்திரிக்கை சார்பில், தேசிய மனித உரிமைகள் ஆணையத்திற்கு இதனுடைய நகல்கள் அனுப்பப்பட்டுள்ளது. இது தவிர, முதலமைச்சர்கள் முதல் உயர் அதிகாரிகள் மற்றும் பிரதமர் வரை அனுப்பப்பட்ட கோரிக்கை மனுக்கள், இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது. மேலும்,இதை தேசிய மனித உரிமைகள் ஆணையர் நீதியரசர் ராமசுப்பிரமணியன் பத்திரிக்கை துறைக்குள் இருக்கின்ற வரலாற்று சுயநல அரசியல் மற்றும் ஊழல்களை களை எடுத்து, முற்றுப்புள்ளி வைக்க சமூக நலன் பத்திரிகைகள் சார்பில் மக்கள் அதிகாரம் பத்திரிக்கையின் கோரிக்கை - ஆசிரியர்.

நாட்டில் இன்று ஏழை ,எளிய நடுத்தர மக்கள் வீடு கட்ட வேண்டும் என்றால்; அதை கட்டி முடிப்பது மிகப்பெரிய சவால்கள் நிறைந்தது,

நடுத்தர மக்கள் ஏழைகள் வீடு கட்டுவது மிகப்பெரிய சவாலாக சிமெண்ட், ஜல்லி, செங்கல், மணல், எம். சேண்ட் போன்றவற்றின் விலை உயர்வை தடுப்பாரா? - முதல்வர் விஜய்

மேலும், சிமெண்ட் விலை, செங்கல் விலை, மணல் விலை, ஜல்லி விலை, இந்த விலை உயர்வால், மக்கள் வீடு கட்டுவது மிகப்பெரிய போராட்டமாக உள்ளது.இது ஒரு புறம் என்றால்,

கூலி இதற்கு சமமாக உயர்ந்துள்ளது. இன்றைய வீடு கட்டும் ஒரு மேஸ்திரியின் ஒரு நாள் கூலி , ஆயிரம் ரூபாய்க்கு மேல் அதிகமாகி விட்டது. இது எல்லாம் ஒரு பக்கம் இருக்க, அந்தந்த பகுதியில் உள்ள கவுன்சிலர்கள் ,அரசியல் கட்சியினர், வீடு கட்டுபவன் தெரு ஓரமாக மணலோ, சிமெண்ட் கல்லோர் ஜெல்லியோ கொட்டினால் ,உடனே அவனை மிரட்டி பணம் கேட்பார்கள்.

இப்படி எல்லாம் உழைத்து வீடு கட்டுபவன் ,வீடு கட்டி முடிப்பதற்குள் அவன் படும் பாடு ,மிகப்பெரிய கொடுமை. இதனால் வட்டிக்கு வாங்கி வீடு கட்டுபவர்கள் ,பலர் கடனாளி ஆகிறார்கள்.
கட்டுமானப் பொருள்கள்
தற்போதைய சுமார் விலை

செங்கல்RS:11–13 / ஒன்று
M-Sand RS : 5,600–6,500 / 100 CFT
P-Sand RS :5,700 - 7,300 / 100 CFT
ஆற்று மணல் RS :7,800 - 9,050 / 100 CFT
ஜல்லி / Blue Metal RS :5,200 / 100 CFT
மேலும் TMT கம்பி RS :58–66 / கிலோ
மேலும் ,வட்டிக்கு வாங்கி கட்டிய ,வீட்டை கடனை அடைக்க முடியாமல், எத்தனையோ பேர் பாதியிலே விற்று விடுகிறார்கள். இந்தளவுக்கு இவை எல்லாம் ஏழை, எளிய நடுத்தர, மக்களுக்கு இந்த விலை உயர்வு, கூலி, அரசியல் கட்சியினர், இதற்கெல்லாம் கடந்த ஆட்சியில் இருந்தது .

மேலும் ,அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு! நடுத்தர, ஏழை மக்களை புலம்ப வைத்துள்ளதா?தமிழக வெற்றி கழகத்தின் ஆட்சியில் ஏழை எளிய நடுத்தர மக்களை விலைவாசி உயர்வு புலம்ப வைத்துவிட்டது.

அதாவது,இப்போது 25 கிலோ, அரிசி ரூபாய் 1500க்கு குறைந்து விலை இல்லை. அதேபோல் ,ஒரு லிட்டர் பால் 86 ரூபாய்.இது தவிர,தற்போதைய மளிகை பொருட்களின் விலை:
சாதாரண அரிசி
1 கிலோ RS :45 - 60
பொன்னி அரிசி1 கிலோ RS : 65 - 80
இட்லி அரிசிRS :1 கிலோ 40 - 55

பச்சை அரிசி RS :1 கிலோ45
துவரம் பருப்பு1 கிலோ RS:140 - 160˙.
உளுத்தம் பருப்பு
1 கிலோ RS :125 - 145
பாசிப்பருப்பு 1 கிலோ RS : 105 - 125
கடலைப் பருப்பு1 கிலோRS :85 - 105
சர்க்கரை 1கிலோRS : 50 - 60 கோதுமை மாவு1 கிலோRS : 40 - 55˙சூரியகாந்தி எண்ணெய்1 லிட்டர்RS :180 - 210
கடலை எண்ணெய்1 லிட்டர்
RS : 200 - 240 நல்லெண்ணெய்1 லிட்டர்RS :250 - 350 ,உப்பு1 கிலோRS : 20 - 30
தேயிலைத் தூள்1/4 கிலோ
RS : 250 - 320

இந்த விலை உயர்வை பற்றி பேசும் மக்கள் பஸ்ஸில் இலவச பயணத்தை யார் கேட்டது? இந்த பக்கம் இலவசத்தை கொடுத்து அந்த பக்கம் விலைவாசி உயர்வு மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. புலம்பவும் வைத்துள்ளது. அதனால், தமிழக முதல்வர் விஜய் இது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பாரா?

மக்கள் அதிகாரம்

மலர் 11 இதழ் 10 அக் -2026 Monthly Magzine Rs :10 /-

PRINT & ONLINE MEDIA

K.N. RAJENDRAN .
EDITOR / PUBLISHER

சட்ட ஆலோசனை குழு .
உயர்திரு. கற்பக விநாயகம் அவர்கள்.
உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி (ஓய்வு).

உயர்திரு. முத்துசாமி அவர்கள்,
சீனியர வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றம்.

தலைமை நிருபர் : ஆர் .நிதீஷ் குமார்;

தேனி மாவட்டநிருபர் : முரளிதரன்

விளம்பரம் மற்றும் நிர்வாகி தொடர்பு கொள்ள: எண் : 9344794091 .

விளம்பர கட்டன முழு விவரம் :
பின்பக்கம் கலர் ரூபாய் : 20 ,000 /-
உள்பக்கம் கலர் ரூபாய் : 15,000 /-
கருப்பு வெள்ளை முழு பக்கம் ரூபாய் : 10,000 /-

இமெயில் மற்றும் இணையதளம் முகவரி :
makkaladhikaram.media@gmail.com .
எமது இணையதள முகவரியில் !
Makkaladhikarammedia.com

தினசரி முக்கிய செய்திகளை, வாசகர்கள் படிக்கலாம் . மக்களின் குரலுக்கு ! மக்களுக்காக நடத்தப்படும் ஒரே பத்திரிக்கை!மக்கள் அதிகாரம் .
இது வியாபார நோக்கமற்றது, சமூக நலனுக்கானது. தேச நலனுக்கானது அதனால், பத்திரிகை என்பது எதற்கு முக்கியத்துவம் ஆக இருக்க வேண்டும?
என்பதை கருத்தில் கொண்டு மக்கள் அதிகாரம் பத்திரிக்கை சுமார் 11 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

பத்திரிக்கை பொது நலனுக்காக இருந்தாலும், அதைத்தொடர்ந்து நடத்தப்படும் போது அரசு ஊக்குவிக்காமல் , கார்ப்பரேட் பத்திரிகை தொலைக்காட்சிகளை ஊக்குவிப்பது , மக்களுக்காக அரசாங்கம் நடத்தினால் சமூக நலன் பத்திரிக்கைக்கு முக்கியத்துவம் ஆட்சியாளர்கள்
கொடுப்பார்கள்.
இல்லையென்றால், கார்ப்பரேட் பத்திரிக்கை தொலைக்காட்சியை ஊக்கி விப்பதன் உள்நோக்கம் அது ஊழல் ஆட்சியாக தான் இருக்குமே தவிர, மக்களுக்கான ஆட்சியாக இருக்காது என்பது
உறுதி.
புதிதாக தேர்வு செய்யப்பட்ட தமிழக வெற்றி கழகத்தின் முதல்வர் விஜய் இதற்கு முக்கியத்துவம் அளித்து மக்களுக்கான உண்மை செய்திகளை கொடுப்பதற்கு சமூக நலன் பத்திரிகைகளை ஊக்கி விப்பாரா ?
இனி வரும் காலங்களில் இந்த மாற்றம் எமது தொடர் போராட்டத்தின் வெற்றியாக இருக்குமா? என்பதை வாசகர்கள் இந்த இணையதள பத்திரிக்கை மற்றும்
பத்திரிகை படித்தவர்கள், ஆட்சியின் உண்மை நிலையை புரிந்து கொள்வார்கள்.

printed, published by K.N. Rajendran, printed at Sri Devi karumari enterprises, Anandam Nagar, Vidaiyur Post, Thiruvalluvar Taluk & District - 631203 .